ශ්‍රී ලංකා සම්මේලන කාර්යාංශය

இலங்கை இணக்கப்பாட்டுப் பணியகம்

SRI LANKA CONVENTION BUREAU

# වාර්ෂික වාර්තාව

# வருடாந்த அறிக்கை

# ANNUAL REPORT

# 2021

SRI LANKA
CONVENTION BUREAU

# வருடாந்த அறிக்கை 2021

இலங்கை மாநாட்டுப் பணியகம்

SRI LANKA
CONVENTION BUREAU

# உள்ளடக்கம்


**05**
தூரநோக்கு

**05**
செயற்பணி

**06**
குறிக்கோள்கள்

**07**
கூட்டிணைந்த தகவல்கள்

**09**
தலைவரின் செய்தி

**10**
நிறைவேற்று சுருக்கம்

**11**
2021 ஆம் ஆண்டு சாதனைகள்

**11 - 16**
1. ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி

**16 - 22**
2. சந்தைப்படுத்தல்

**22**
3. மனித வளங்கள் மற்றும் நிருவாகம்

**23**
4. உள்ளகக் கணக்காய்வு

**23**
5. பொருளாதார பெறுமானம் சேர்வு பற்றிய கூற்று

**24 - 35**
6. 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள்


**36**
கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை



இலங்கை மாநாட்டு பணியகத்தின்

## நோக்கம்

'MICE சார்ந்த சுற்றுலாவுக்கு (கூட்டங்கள், ஊக்குவிப்பு பயணங்கள், மாநாடுகள், கண்காட்சிகள் மற்றும் நிகழ்ச்சி நிகழ்வுகள்) ஆசியாவில் அதிகம் தேவைப்படும் ஒரு சுற்றுலா ஸ்தலமாக இலங்கையை நிலைகொள்ளச் செய்தல்'



இலங்கை மாநாட்டு பணியகத்தின்

## செயற்பணி

இலங்கையில் 'மாநாட்டு தொழிலில்' தங்கியிருக்கின்ற நபர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் MICE சுற்றுலாவிலிருந்து இலங்கை மாநாட்டு பணியகத்தை வெளிநாட்டு நாணய பரிவர்த்தனையில் அதிகளவான வருமானத்தை ஈட்டச்செய்தல்.

# குறிக்கோள்கள்

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தினால் (பக்கம் 32 – 33) அதிகார ஆணை வழங்கப்பட்டுள்ளவாறு இந்த மாநாட்டு பணியகத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு காணப்படும்:

- சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் என்பவற்றுக்கு இலங்கையை ஒரு ஸ்தலமாகவும் மற்றும் விளம்பரப்படுத்தக் கூடிய கவர்ச்சியான ஒரு சுற்றுலா ஸ்தலமாகவும் ஊக்குவித்தல்.
- சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் என்பவற்றுக்கு ஒரு ஸ்தலமாகவும் மற்றும் விளம்பரப்படுத்தக் கூடிய கவர்ச்சியான ஒரு சுற்றுலா ஸ்தலமாகவும் இலங்கையின் ஒருங்கிணைந்த கூட்டுறவான சற்றுலா அபிவிருத்தியையும் மற்றும் சந்தைப்படுத்தலையும் உறுதிசெய்யும் நிமித்தம் வடிவமைந்த பொதுவான ஒரு கொள்கையை முன்வைத்தல்.
- சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் என்பவற்றுக்கு ஒரு ஸ்தலமாகவும் மற்றும் விளம்பரப்படுத்தக் கூடிய சிறந்த கவர்ச்சியான ஒரு சுற்றுலா ஸ்தலமாகவும் அரச மற்றும் தனியார் துறைகளின் மூலம் சுற்றுலா சேவைகளை வழங்குதல், சுற்றுலாவின் ஊக்குவிப்புக்கும், அபிவிருத்திக்கும் உதவுதல் மற்றும் சுற்றுலா துறையை ஒருங்கிணைத்தல்.
- மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் என்பவற்றை கட்டமைத்து வெற்றிகரமாக நடத்துவதையும் மற்றும் ஊக்குவிப்பு பயண நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதையும் உறுதிசெய்வதற்கு இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் காணப்படுகின்ற மாநாட்டு, கண்காட்சி மற்றும் ஊக்குவிப்பு சுற்றுலா நிறுவனங்களை ஒருங்கிணைத்தல், கூட்டிணைத்தல்.
- மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் ஊக்குவிப்பு சுற்றுலா பயணம் முதலிய பல அம்சங்களை கையாளுவதில் சம்பந்தப்படும் நபர்களின் அல்லது நிறுவனங்களின் மூலம் தொழில்சார் நியமங்களின் பேணுகையை குறிப்பீடுசெய்து அந்த நியமங்களை நடைமுறைப்படுத்துதல்.
- மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் ஊக்குவிப்பு சுற்றுலா பயணம் முதலிய பல அம்சங்களை கையாளுவதில் சம்பந்தப்படும் பல வகுதி நபர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு மத்தியில் தொழில்சார் திறன்கள் அபிவிருத்தியை ஊக்குவித்தல்.
- மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் ஊக்குவிப்பு சுற்றுலா பயணம் என்பவற்றை மேலும் அபிவிருத்தி செய்வதிலும் அதே போல் ஊக்குவிப்பதிலும் ஈடுபடும் ஏதாவது சங்கத்துடன் அல்லது அமைப்புடன் இணைதல், அதன் உறுப்புரிமையை பெற்றுக் கொள்ளல் அல்லது ஏதாவது ஒப்பந்தத்தை செய்து கொள்ளல்.
- இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் இலங்கையை ஒரு சிறந்த சுற்றுலா பயண ஸ்தலமாக அபிவிருத்தி செய்வதற்கும், ஊக்குவிப்பதற்கும், சுற்றுலாவை சந்தைப்படுத்துவதற்கும் வழிகாட்டுதல்.
- உபசரணை தொழில் அடங்கலாக நிலையான ஒரு விதத்தில் போதியளவு கவரக்கூடிய வினைத் திறன் வாய்ந்த சுற்றுலாச் சேவைகளை ஊக்குவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.
- பணியகத்தின் குறிக்கோள்களை அடையும் நிமித்தம் சமயோசித அல்லது உகந்த அத்தகைய சகல செயல்களையும் மற்றும் விடயங்களையும் இலங்கையில் அல்லது வேறு ஏதாவது இடத்தில் மேற்கொள்ளல்.

# கூட்டிணைந்த தகவல்கள்

இலங்கை மாநாட்டு பணியகம் (இ.மா.ப.) 1987 ஆம் ஆண்டு ஒரு உத்தரவாத நிறுவனமாக ஸ்தாபிக்கப்பட்டது. இந்த மாநாட்டு பணியகம் இலங்கையை கூட்டங்கள், ஊக்குவிப்பு பயணங்கள், அமர்வுகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் (பின்னர் சில சந்தர்ப்பங்களில் நிகழ்வுகளும் அடங்கலாக) போன்ற MICE சுற்றுலாவுக்கான ஒரு ஸ்தலமாக ஊக்குவிக்கும் வகையில் சுற்றுலா அமைச்சின் கீழ் தொழிற்பட்டு வருகின்றது. நிதி நெருக்கடி காரணமாக இந்த பணியகத்தின் தொழிற்பாடுகள் ஒரு சில குறித்த செயற்பாடுகளுக்கு மாத்திரம் மட்டுப்பட்டிருந்தன.

இந்த நிலைமையில் இருந்த இந்தப் பணியகம், உத்தரவாதத்தின் மூலமாக இல்லாதொழிக்கப்பட்டு 2005 இன் 38 ஆம் இலக்க கடந்த கால சுற்றுலா சட்டத்தின் கீழ் ஒரு நியதிச்சட்ட நிறுவனமாக மாற்றப்பட்டது. இ. மா. ப. தற்பொழுது சுற்றுலா அபிவிருத்திக் கட்டணம் மற்றும் சுற்றுலா பயணிகள் வரிக் கட்டணம் என்பவற்றிலிருந்து கிடைக்கும் 4% வருமானம் அடங்கலாக அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டத்தினால் ஒதுக்கப்படும் நிதியில் இயங்கி வருகின்றது.

பெயர் : இலங்கை மாநாட்டுப் பணியகம்

சட்ட அந்தஸ்து : 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின், கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ள நியதிச்சட்ட சபை

தலைமை அலுவலக முகவரி : இலக்கம் 78, காலி வீதி, கொழும்பு 03

கணக்காய்வாளர்கள் : இலங்கை கணக்காய்வாளர் அதிபதி

வங்கியாளர்கள் : இலங்கை வங்கி

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினர்கள் பற்றிய விபரம்

| பெயர் | காலப் பகுதி | நிறுவனம் |
|---|---|---|
| திருமதி. கிமர்லி பெர்னாந்து | 2021.01.01 - 2021.12.31 | தலைவர் - இ. மா. ப. |
| திரு. சுனில் திஸாநாயக்க | 2021.01.01 - 2021.12.31 | பணிப்பாளர் நாயகம் - பீ. எம். ஐ. சி. எச். |
| திரு. மனேஸ் பெர்னாந்து | 2021.01.01 - 2021.12.31 | இலங்கை சுற்றுலா ஹோட்டல் சங்கம் |
| திருமதி. கயாங்கி வீரசிங்க | 2021.01.01 - 2021.12.31 | இலங்கை இன்பவுண்ட் ட்டுவர் இயக்குநர்கள் சங்கம் |
| திருமதி. ஷிபானி ஆர். தம்பையா | 2021.01.01 - 2021.12.31 | கொழும்பு நகர சுற்றுலா ஹோட்டல்கள் சங்கம் |
| பேராசிரியர். ஜனித்த ஏ. லியனகே | 2021.01.01 - 2021.12.31 | விஞ்ஞான முன்னேற்றத்திற்கான இலங்கை சங்கம் |
| பொறியியலாளர். சாந்த செனரத் | 2021.01.01 - 2021.12.31 | தொழில் சங்க நிறுவனம் |
| திருமதி. சேர்லி ஜயவர்த்தன | 2021.01.01 - 2021.12.31 | இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் கூடகங்கள் சம்மேளனம் |
| திருமதி. எம்.ஏ. நந்தனி | 2021.01.01 - 2021.12.31 | தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் |
| திருமதி. தம்மிக்கா விஜயசிங்ஹ | 2021.01.01 - 2021.12.31 | பணிப்பாளர் நாயகம் - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை |
| திரு. திமுத்து தென்னகோன் | 2021.01.01 - 2021.12.31 | ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ் நிறுவனம் |
| திரு. சி.எச். கமகே | 2021.01.01 - 2021.05.09 | சுற்றுலா அமைச்சு |
| திருமதி. எம்.டீ.எஸ். ப்ரசாதினி | 2021.05.10 - 2021.12.31 | சுற்றுலா அமைச்சு |
| கலாநிதி. டீ.எம். அஜித் திஸாநாயக்க | 2021.01.01 - 2021.12.31 | பொறியியல் பிரிவு, களணிப் பல்கலைக்கழகம் |

## முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம்

| | | |
|---|---|---|
| திருமதி. எம். அனோமா நந்தினி | க. மு. கு. தலைவர் | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் - தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் |
| திரு. சுனில் திஸாநாயக்க | உறுப்பினர் | பணிப்பாளர் நாயகம் - பீ. எம். ஐ. சி. எச். |
| திரு. சி.எச். கமகே | உறுப்பினர் (01 சனவரி முதல் 05 மே 2021 வரை) | சிரேஷ்ட உதவி செயலாளர் (நிருவாகம்) - சுற்றுலா அமைச்சு |
| திருமதி. எம்.டீ.எஸ். ப்ரசாதினி | உறுப்பினர் (01 நவம்பர் முதல் 31 திசம்பர் 2021 வரை) | சிரேஷ்ட உதவி செயலாளர் (நிருவாகம்) - சுற்றுலா அமைச்சு |
| திரு. மனேஸ் பெர்னாந்து | உறுப்பினர் (01 நவம்பர் முதல் - 31 திசம்பர் 2021 வரை) | பொது முகாமையாளர் - கொழும்பு ஹில்டன் ஹோட்டல் |
| திருமதி. ரீ. இம்புல்தெனிய | அவதானிப்பாளர் | அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர் - தேசிய கணக்காய்வு அலுவலகம் |
| திரு. பி. லுரேந்திரன் | அவதானிப்பாளர் | தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் - சுற்றுலா அமைச்சு |

# தலைவரின் செய்தி

**இலங்கை மாநாட்டுப் பணியகத்தினது தலைவரின் செய்தி**

MICE சுற்றுலா (கூட்டங்கள், ஊக்குவிப்பு பயணம், மாநாடுகள், கண்காட்சிகள்/ நிகழ்ச்சிகள்) என்பது இலங்கை சுற்றுலாவுடன் இணைந்து வளர்ந்த ஒரு விஷேட பிரிவாகும். இலங்கையை கூட்டங்கள், ஊக்குவிப்புகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் என்பவற்றுக்கான இறுதி ஸ்தலமாக MICE சுற்றுலாவுக்கும் அதே போல் நாட்டின் குறிப்புக்கும் வழிவகுக்கின்ற வகையில் ஊக்குவிப்பது இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் (இ.மா.ப) பிரதான கடப்பாடாக விளங்குகின்றது. கோவிட் தொற்றுநோய் நிலவரம் காரணமாக உலகலாவிய ரீதியில் பாதகமான நிலை காணப்பட்டாலும் கூட, 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இ.மா.ப அந்த கடப்பாட்டை நிறைவு செய்ய பல முக்கிய செயற்பாடுகளை மேற்கொண்டு நிறைவேற்றியது.

முதல் தடவையாக மெய்நிகர் MICE சுற்றுலா கண்காட்சியை, இ.மா.ப 2021 ஆம் ஆண்டில் நடத்தியது. கூட்டங்கள் / மாநாடுகள், கண்காட்சிகள், திருமண விழா, ஊக்குவிப்பு மாநாடுகள் என்பவற்றை ஏற்பாடு செய்யும் தரப்புகளின் நிமித்தம் 70 கண்காட்சி கொட்டகைகளுக்கும் அதிகளவான கண்காட்சிக் கொட்டகைகள் அடங்கிய மெய்நிகர் ரீதியான ஒரு கண்காட்சி, பதிவுபெற்றிருந்த 487 சர்வதேச சுற்றுலா வாடிக்கையாளர்கள், நான்கு வணிக கூட்டங்கள் என்பன குறித்த இந்த மெய்நிகர் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடங்கியிருந்தன. கொவிட்டு தொற்றுநோய்க்கு பிற்பட்டகாலத்தில் MICE சுற்றுலா குழுக்களை வரவேற்று உபசரிக்கும் முகமாக சுற்றுலா இறுதி ஸ்தல ஆயத்தத்தையும் மற்றும் போட்டித் தன்மையையும் வெளிப்படையாக காண்பிப்பது குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான குறிக்கோளாக இருந்தது. 'இலங்கையில் சந்திப்பு' என்ற கருப்பொருள் கீழ், இ.மா.ப சமூக ஊடகங்களை பன்முகப்படுத்தியது. முகநூல், லிங்க்டின், டுவிட்டர், இன்ஸ்டகிராம் மற்றும் யூ டியூப் முதலியன இந்த கருப்பொருளில் உள்ளடங்கியிருந்தன. இலங்கையை சர்வதேச சுற்றுலாவின் நிமித்தம் திறந்து வைக்கும் நிரலில், இந்தப் பணியகம் 'MICE சுற்றுலா பயணிகளையும் மற்றும் சுற்றுலா குழுக்களையும்' வரவேற்கத் தயாராக இருக்கின்றது' என்ற செய்தியை விடுக்கும் முகமாக முக்கிய சுற்றுலா சந்தை பிரிவுகளில் மெய்நிகர் நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்து நடத்தியது.

இராஜதந்திரிகளும், எயார்லைன் நிறுவன ஊழியர்களும், அரச அதிகாரிகளும், வணிக கூடகங்கள், அமைப்புகள், சுற்றுலா ஸ்தல முகாமைத்துவ நிறுவனங்கள், மற்றும் இலங்கையில் சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தக் கூடிய உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியனவும் உள்ளடங்கலாக பல துறை அக்கறையுடைய தரப்புகளுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக 'MICE சுற்றுலா பற்றிய இ.மா.ப தலைவரின் ஆயம்' என்ற தலைப்பில் இ.மா.ப ஐந்து MICE சுற்றுலா சந்திப்பு கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தது. எமது பிராந்தியத்தின் ஹோட்டல் உரிமையாளர்களின் நன்மை கருதி 'இலங்கை MICE சுற்றுலாவை மீள்விவரிக்கும் 'MICE UP' என்ற கருப்பொருளின் கீழ் சகல பிராந்தியங்களையும் உள்ளடக்கிய ஒரு மெய்நிகர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் நடத்தப்பட்டது. சுற்றுலா தொழிலை உருவாக்கும் ஒரு வழிமுறையாக, இந்தப் பணியகம் களுத்துறை / பேருவளை MICE / பெந்தோட்டை / நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் MICE சார்ந்த சுற்றுலா ஸ்தலங்களை பரிட்சயப்படுத்தும் ஒரு மெய்நிகர் சுற்றுலா நிகழ்ச்சித் திட்டம் - 'முதல் கன்னி 2021 எக்ஸ்போ நிகழ்ச்சித் திட்டத்தை' ஏற்பாடு செய்து நடத்தியது.

நாம் தனியாக பாடுபடுவதை விடவும் தமது சுற்றுலா கவர்ச்சி ஸ்தலங்களை துல்லியமாக சந்தைப்படுத்தும் ஏனைய பிராந்தியங்களுடன் போட்டியிடுவது அவசியம் என நம்புகின்றோம். இந்த காரணத்தின் நிமித்தம், அரசுகளுக்கு இடையில் கலந்துரையாடல்கள் திட்டமிடப்பட்டு நடத்தப்படுகின்ற போது நாம் தனியார் துறையின் பங்குபற்றலை ஊக்குவிக்கின்றோம். கொள்கை ஆக்குவது அரசாங்கங்களின் பொறுப்பாகும். ஆகையால் தனியார் துறையானது, வணிக நடவடிக்கைகளை இலாபகரமாக மேற்கொள்ள வேண்டும்.

கிமர்லி பெர்னாந்து
தலைவர்
இலங்கை மாநாட்டுப் பணியகம்

# நிறைவேற்று சுருக்கம்

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கோவிட்-19 வைரஸ் தொற்று நோய் பரவியது. இந்த நிலையில் அந்த நோயில் இருந்து உலகலாவிய ரீதியில் ஒரு சில நிவாரணங்கள் எதிர்பார்க்கப்பட்டன. எவ்வாறாயினும் கொவிட்-19 புதிய வகையான தொற்றுக்கள் பரவத் தொடங்கியதால், எதிர்பார்த்த அத்தகைய நிவாரணங்கள் கிடைக்கவில்லை. இந்தப் புதிய தொற்று நோய் நிலைமை உலக சுற்றுலா பயணிகள் வருகையில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இந்த நிலைமை 2021 ஆம் ஆண்டிற்கு என திட்டமிடப்பட்டிருந்த இந்த இ.மா.ப. இன் பல முயற்சிகளில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும் பெரும்பான்மையான பயிற்சிகளும் மற்றும் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளும் திட்டமிடப்பட்டவாறு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் என்பவற்றை கையாளுவதில் சம்பந்தப்படுகின்ற வித்தியாசமான வகுதி நபர்களுக்கு / நிறுவனங்களுக்கு மத்தியில் தொழில் திறன்களை விருத்தி செய்யும் முகமாக, இ.மா.ப. இலங்கையில் சகல பிராந்தியங்களையும் உள்ளடக்கி ஹோட்டல் உரிமையாளர்களுக்கு ஒரு மெய்நிகர் பிராந்திய பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தையும் அதே போல் இலங்கையில் MICE சுற்றுலா கைத்தொழிலின் நிமித்தம் ஒரு மெய்நிகர் பரிட்சய சுற்றுலா நிகழ்ச்சித் திட்டத்தையும் மற்றும் இராஜதந்திர தூதரகங்கள் மற்றும் இலங்கையிலுள்ள எயார்லைன்ஸ், சங்கங்கள் மற்றும் சம்மேளனங்கள், MICE சுற்றுலா துறை, கல்வி நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் என்பவற்றை இலக்காகக் கொண்டமைந்த 5 MICE சுற்றுலா விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் ஏற்பாடு செய்து நடத்தியது.

இலங்கையை ஒரு MICE சுற்றுலா ஸ்தலமாக விளம்பரப்படுத்தி சந்தைப்படுத்தும் பொருட்டு இ.மா. ப. தனது இ.மா.ப. சுற்றுலா வணிக விளம்பரமாக துணியிலான உறைகள் மீது புதிய யூஆர்எல் சுற்றுலா தளத்தை மீளத்தயாரித்து வழங்கியது. துணியிலான இந்த உறைகள் இ.மா.ப. MICE சுற்றுலாவை விளம்பரப்படுத்திய நேரத்தில் வெகுமானமாக பகிர்ந்தளிப்பதற்காக தயாரிக்கப்பட்டன. ஒரு நிமிட நான்கு MICE சுற்றுலா வீடியோக்களும் தயாரிக்கப்பட்டன. இ.மா.ப. சுற்றலா வணிக நிகழ்ச்சிகளுக்கான ஒரு நுண் தளத்தை அபிவிருத்தி செய்து 'மீட் இன்ஸ் ஸ்ரீலங்கா' என்ற டெக்லைனில் தனது செயற்பாடுகளை சமூக ஊடகத்தினுள் பல்வகைப்படுத்தியது. எமது பணியகம் இந்திய MICE சுற்றுலா முகவர்களின் நிமித்தம் ஒரு மெய்நிகர் பரிட்சய சுற்றுலாவை ஏற்பாடு செய்திருந்தது. மேலும் இந்தப் பணியகம் இலங்கை தொழில் மாநாட்டு சங்கம், கண்காட்சி மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாட்டுத் தரப்புகள் (SLAPCEO) என்பவற்றுடன் கூட்டாக இணைந்து இலங்கையின் முதலாவது மெய்நிகர் எக்ஸ்போ 2021 ஐயும் ஏற்பாடு செய்திருந்தது. அது மட்டுமன்றி, 'இலங்கை MICE சுற்றுலா பயணிகளையும் மற்றும் சுற்றுலா குழுக்களையும் வரவேற்க தயாராகவுள்ளது' என்ற செய்தியை விடுக்கும் பொருட்டு சில முக்கியமான சுற்றுலா சந்தைகளில் மெய்நகர் கருத்தரங்குகளையும் நடத்தியது. இந்தப் பணியகம் உல சுற்றுப் பயணங்கள் மாநாட்டிலும் கலந்து கொண்டது. மேலும் இ.மா.ப. MICE சுற்றுலா / சுற்றுலா வணிகம் பற்றிய புள்ளி விபரங்களை தயாரிப்பதற்கான முறைசார்ந்த முறையியல் இல்லாமை விடயத்தை அடையாளப்படுத்தும் முகமாக MICE சுற்றுலா தொடர்பான ஒரு அமைச்சரவைப் பத்திரத்தையும் தயாரித்தது.

# 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அடைந்த சாதனைகள்

## 1. ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி

### 1.1 MICE சுற்றுலா பயிற்சி

#### 1.1.1 இ.மா.ப. தலைவரின் கூட்டங்கள்

இலங்கையில் சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்யக் கூடிய பல துறையிலும் அக்கறை உடைய தரப்புகளுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு இ.மா.ப. இலங்கை தொழில் மாநாட்டு சங்கம், கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கமைப்பாளர்கள் (SLAPCEO) சங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் 'MICE சுற்றுலா தொடர்பான இ.மா.ப. தலைவரின் கூட்டம்' எனும் தலைப்பிலான பல கூட்டத் தொடர்களை இ.மா.ப. ஏற்பாடு செய்திருந்தது. சுற்றுலா துறையில் பங்குகொள்ளும் நபர்கள் எமது நாட்டில் சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்களுக்கு எவ்வாறு உபசரணை அளிக்க வேண்டும் மற்றும் இ.மா.ப. அவர்களுக்கு வழங்கும் உதவிகள் என்பன பற்றி இ.மா.ப. அவர்களுக்கு போதித்தது.

அ) இராஜதந்திரிகளுக்கும் மற்றும் எயார்லைன்ஸ்களுக்குமான MICE சுற்றுலா தொடர்பான இ.மா.ப. தலைவரின் 1-வது கூட்டம்



குழுக் கலந்துரையாடல் நிகழ்கின்ற காட்சி

மேற்குறித்த கூட்டம் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி பீ.எம்.ஐ.சி.எச். மண்டபத்தில் ஒரு கலப்பு நிகழ்ச்சியாக நடத்தப்பட்டது. இலங்கையை எவ்வாறு ஒரு MICE சுற்றுலா ஸ்தலமாக விளம்பரப்படுத்துவது, 'இலங்கையில் கூட்டத்தை' நடத்தும் முகமாக சுற்றுலா வணிகம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் எவ்வாறு வெளிநாடுகளில் சுற்றுலா ஸ்தல விளம்பர செயற்பாடுகளை ஏற்பாடு செய்வது, MICE சுற்றுலாவுடன் தொடர்புடைய புதிய தொழில் நுட்பங்களை எவ்வாறு ஈர்த்துக் கொள்வது மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை எவ்வாறு ஈர்த்துக் கொள்வது என்பன பற்றி பங்குபற்றும் தரப்புகளுக்கு போதிப்பது இதன் பிரதான நோக்கமாக இருந்தது. வெளிநாட்டு தூதுவர்கள், எயார்லைன்ஸ் அதிகாரிகள், ஏனைய சுற்றுலா அக்கறையுடைய தரப்புகள் அடங்கலாக மொத்தம் 44 பௌதீக மற்றும் மெய்நிகர் பங்குபற்றுநர்கள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தனர்.

ஆ) சம்மேளனங்களுக்கும் மற்றும் சங்கங்களுக்குமான MICE சுற்றுலா தொடர்பான இ.மா.ப. தலைவரின் 2-வது கூட்டம்

'இலங்கையில் MICE சுற்றுலாவை அபிவிருத்தி செய்வதற்கு வணிக சம்மேளனங்களினதும் மற்றும் சங்கங்களினதும் வகிபங்கு'

மேற்குறித்த கூட்டம் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி முழுமையான ஒரு மெய்நிகர் நிகழ்ச்சித் திட்டமாக நடத்தப்பட்டது. இலங்கையை ஒரு MICE சுற்றுலா ஸ்தலமாக எவ்வாறு விளம்பரப்படுத்துவது, பிராந்திய மற்றும் சர்வதேச MICE சுற்றுலா நிகழ்ச்சித் திட்டங்களை பொறுப்பேற்று நடத்தும் வகையில் உறவுகளை எவ்வாறு கட்டியெழுப்புவது, இலங்கைக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஈர்த்துக் கொள்ளும் பொருட்டு வணிக சம்மேளனங்களினதும் மற்றும் சங்கங்களினதும் பிராந்திய மற்றும் சர்வதேச வலையமைப்புகளை எவ்வாறு அடைந்து கொள்வது என்பன பற்றி பங்குபற்றுநர்களுக்கு போதிப்பது இதன் பிரதான நோக்கமாக இருந்தது. வணிக சம்மேளனங்களையும் மற்றும் சங்கங்களையும் பிரதிநிதிப்படுத்திய மொத்தம் 80 மெய்நிகர் பங்குபற்றுநர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இ) சுற்றுலா ஸ்தல முகாமைத்துவ கம்பனிகளுக்கான MICE சுற்றுலா தொடர்பான இ.மா.ப. தலைவரின் 3-வது கூட்டம்

'கோவிட்-19 தொற்று நோய் காலத்தின் பின்னர் இலங்கையின் MICE சுற்றுலா நிலை'

மேற்குறித்த கூட்டம் நவம்பர் மாதம் 23 ஆம் திகதி பீ. எம். ஐ. சி. எச். மண்டபத்தில் ஒரு கலப்புக் கூட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. MICE சுற்றுலாவின் தற்போதைய போக்குகள், இலங்கையை MICE சுற்றுலாவுக்கான ஒரு ஸ்தலமாக விளம்பரப்படுத்தும் வகையில் எவ்வாறு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் என்பன பற்றி பங்குபற்றுநர்களுக்கு போதித்தல், பங்குபற்றுநர்கள் MICE ஆக மாறக் கூடிய வகையில் ஆக்கத் திறனை மேம்படுத்தி அவர்களை ஊக்கப்படுத்தல், MICE சுற்றுலாவுடன் தொடர்பான அறிவை மேம்படுத்துவதற்கு கிடைக்கக் கூடிய பயிற்சி மற்றும் அபிவிருத்தி உதவிகளை இனங்காணுதல், பிராந்திய மற்றும் சர்வதேச MICE சுற்றுலா நிகழ்ச்சித் திட்டங்களை பொறுப்பேற்று நடத்துவதற்கு கிடைக்கக் கூடிய சந்தைப்படுத்தும் உதவிகளை இனங்காணுதல் என்பன இந்தக் கூட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாக இருந்தன. பதிவு பெற்ற தொழில் மாநாட்டு / கண்காட்சி ஏற்பாட்டுத் தரப்புகள், சுற்றுலா ஸ்தல / சுற்றுலா நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவ கம்பனிகள், கூட்டங்களை திட்டமிடும் தரப்புகள், ஊக்குவிப்பு சுற்றுலா ஏற்பாட்டுத் தரப்புகள், மாநாட்டு ஹோட்டல்கள், MICE சுற்றுலா ஸ்தலங்கள் மற்றும் சுற்றுலா அனுபவ சேவை வழங்கும் தரப்புகள் முதலிய தரப்புகளை பிரதிநிதிப்படுத்தி மொத்தம் 170 மெய்நிகர் பங்குபற்றுநர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஈ) அரச நிறுவனங்களுக்கான MICE சுற்றுலா தொடர்பான இ.மா.ப. தலைவரின் 4-வது கூட்டம்

'இலங்கையில் MICE சுற்றுலா அபிவிருத்திற்கான அரச பொறிமுறைத்திட்டம்'

MICE சுற்றுலா தொடர்பான இ.மா.ப. தலைவரின் இந்த 4-வது கூட்டம் நவம்பர் மாதம் 29 ஆம் திகதி கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் ஒரு மதிய போஷன




கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் பங்குபற்றுநர்கள்

கூட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. MICE சுற்றுலா எவ்வாறு அதிகளவில் இலங்கைக்கு நன்மை அளிக்கின்றது மற்றும் அந்த பங்குபற்றுநர்கள் சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஒரு உபசரணை தரப்பாக மாறுவதன் மூலம் அவர்களின் நிறுவனங்களுக்கு கிடைக்கக் கூடிய வாய்ப்புகளை பயன்படுத்தி MICE சுற்றுலா நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இலங்கையை மிகவும் விரும்பத்தக்க ஒரு சுற்றுலா ஸ்தலமாக பரிவர்த்தனை செய்யும் பொருட்டு அவர்கள் தத்தமது துறைகளில் முக்கியமான ஒரு பங்களிப்பை செய்யும் வகையில் அவர்களை எவ்வாறு தூண்டுவது என்பது பற்றி பங்குபற்றுநர்களுக்கு போதிப்பது இந்தக் கூட்டத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. பதிவு பெற்ற அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்க சபைகள், அரச கூட்டுத் தாபனங்கள், அரசாங்கத்திற்கும் மற்றும் தனியாருக்கும் சொந்தமான அரை அரச நிறுவனங்கள், மாகாண சபைகள், மாநகர சபைகள் மற்றும் ஏனைய உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றை பிரதிநிதிப்படுத்தி மொத்தம் 36 பங்குபற்றுநர்கள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்டனர்.

உ) உயர் கல்வி நிறுவனங்களுக்கான MICE சுற்றுலா தொடர்பான இ.மா.ப. தலைவரின் 5-வது கூட்டம்

'உயர் கல்வி நிறுவனங்களின் ஊடான MICE பொருளாதார அபிவிருத்தி'



நிகழ்கின்ற கேள்வி பதில் கரத்தரங்கு

மேற்குறித்த கூட்டம் நவம்பர் மாதம் 29 ஆம் திகதி தாஜ் சமுத்ரா ஹோட்டலில் ஒரு பௌதீகக் கூட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. MICE சுற்றுலா எவ்வாறு அதிகளவில் இலங்கைக்கு நன்மை அளிக்கின்றது மற்றும் அந்த பங்குபற்றுநர்கள் சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஒரு உபசரணை தரப்பாக மாறுவதன் மூலம் அவர்களின் நிறுவனங்களுக்கு கிடைக்கக் கூடிய வாய்ப்புகளை பயன்படுத்தி MICE சுற்றுலா நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இலங்கையை மிகவும் விரும்பத்தக்க ஒரு சுற்றுலா ஸ்தலமாக பரிவர்த்தனை செய்யும் பொருட்டு அவர்கள் தத்தமது துறைகளில் முக்கியமான ஒரு பங்களிப்பை செய்யும் வகையில் அவர்களை எவ்வாறு தூண்டுவது மற்றும் MICE சுற்றுலா ஊழியர்படையை எவ்வாறு மேம்படச் செய்வது என்பன பற்றி பங்குபற்றுநர்களுக்கு போதிப்பது இந்தக் கூட்டத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களை / பாடசாலைகளை பிரதிநிதிப்படுத்தி மொத்தம் 44 பங்குபற்றுநர்கள் இந்த நிகழ்வு கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### 1.1.2 ஹோட்டல் உரிமையாளர்கள், சுற்றுலா ஸ்தலங்களை வழங்கும் தரப்புகள் மற்றும் சுற்றுலா அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்கும் தரப்புகள் ஆகியவற்றுக்கான பிராந்திய MICE சுற்றுலா பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

இலங்கையிலுள்ள பிராந்திய ஹோட்டல் உரிமையாளர்களின் நலன்களை கருத்திற் கொண்டு தொழில் மாநாட்டு கண்காட்சி மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாட்டுத் தரப்புகளின் ஒத்துழைப்பில் 'இலங்கையின் MICE சுற்றுலாவை மறுவரையறை செய்தல் அதாவது MICE UP' என்ற ஒரு தொணிப்பொருளில், ஒரு மெய்நிகர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி நடத்தப்பட்டது.

கோவிட்-19 தொற்று நோய் காலத்திற்கு பின்னர் எழுகின்ற சம்பவங்களை கையாளுவது தொடர்பான மிக முக்கிய விடயங்களில் குறித்த நிகழ்ச்சித் திட்டம் ஒருமுகப்பட்டிருந்தது. சுற்றுலாத் துறை மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்யும் துறை ஆகிய துறைகள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் மற்றும் சுகாதார வழிகாட்டல்களுக்கு இணங்க வெற்றிகரமான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை எவ்வாறு ஏற்பாடு செய்வது முதலிய விடயங்களில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பயிற்சி விடயப்பரப்பு ஒருமுகப்பட்டிருந்தது.

சாதகமான ஒரு மனோபாவத்துடன் மீண்டும் MICE சுற்றுலா செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு நாடளாவிய ரீதியில் ஆர்வம் காட்டிய 100 பங்குபற்றுநர்களுக்கும் அதிகமான பங்குபற்றுநர்கள் குறித்த ஒன்லைன் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

### 1.1.3 'ஆய்வு ஆராய்ச்சி 2021' - களுத்துறை / பேருவளை / பெந்தோட்டை / நீர்கொழும்பு ஆகிய பகுதிகளிலுள்ள MICE சுற்றுலா ஸ்தலங்களில் மெய்நிகர் பரிட்சய சுற்றுலா

'ஆய்வு ஆராய்ச்சி 2021' எனும் ஒரு தொணிப்பொருளில் கொழும்பிலிருந்து பேருவளை மற்றும் கொழும்பிலிருந்து வைக்கால வரையான பிரதேசங்களில் MICE சுற்றுலா செயற்பாடுகளின் நிமித்தம் கிடைக்கக் கூடிய புதிய மற்றும் தனித்துவம் வாய்ந்த சுற்றுலா ஸ்தலங்களில் இ.மா.ப. தனது முதல் முதலாவது பரிட்சய சுற்றுலாவை ஏற்பாடு செய்திருந்தது. பதிவு பெற்ற உள்நாட்டு தொழில் மாநாட்டு ஏற்பாட்டுத் தரப்புகள், கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்யும் தரப்புகள், நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் தரப்புகள், கூட்டங்களை திட்டமிட்டு நடத்தும் தரப்புகள், திருமண வைபவங்களை திட்டமிட்டு நடத்தும் தரப்புகள் மற்றும் சுற்றுலா ஸ்தல முகாமைத்துவ கம்பனிகள் என்பவற்றை பிரதிநிதிப்படுத்தி 100 பங்குபற்றுநர்களுக்கும் அதிகமான பங்குபற்றுநர்கள் இதில் கலந்து கொண்டனர். மகிழ்ச்சியான கவர்ச்சியான சுற்றுலா ஸ்தலங்களில் வித்தியாசமான சுற்றுலா அனுபவங்களை அனுபவிப்பதற்கு எதிர்பார்க்கின்ற கூட்டங்களை திட்டமிட்டு நடத்தும் வெளிநாட்டுத் தரப்புகளுக்கு இத்தகைய சுற்றுலா பண்புகளை விளம்பரப்படுத்தும் பொருட்டு விரிவான தகவல்களை இதில் பங்குபற்றிய நபர்களினால் பெற்றுக் கொள்ள முடிந்தது.

## 1.2 சுற்றுலா தொழில் உறுப்பினர்களுக்கு மத்தியில் அறிவைப் பகிர்ந்து கொள்ளல்

அறிவைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு வழிமுறையாக, இ.மா.ப. புதிய சாதாரண நிலைமையில் வெளிநாட்டு சுற்றுலா வாடிக்கையாளர் தரப்புகளுக்கு மத்தியில் இலங்கையின் சுற்றுலாவை சந்தைப்படுத்துவதிலும் மற்றும் விளம்பரப்படுத்துவதிலும் உள்நாட்டு MICE சுற்றுலா தொழில் உறுப்பினர்களை போட்டித் தன்மை வாய்ந்தவர்களாக மாறச் செய்யும் பொருட்டு பின்வரும் சுற்றுலா பற்றிய தகவல் அறிக்கைகளை பகிர்ந்தளித்தது.

அ) IBTM போக்குகள் கண்காணிப்பு அறிக்கை 2021:2020 ஆம் ஆண்டில் சென்ற 12 மாத காலப் பகுதியில் நிகழ்ந்துள்ள மற்றும் எதிர்வரும் காலப் பகுதியில் எதிர்வுகூறப்பட்ட மிகவும் காத்திரமான சில புவியியல் சார் நிகழ்வுகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆ) ICCA கஒஹ்சியுங் ப்ரொட்டகோல் - இது பூகோள MICE சுற்றுலாக்கள் / சுற்றுலா நிகழ்ச்சித் திட்டங்கள் நிமித்தம் ICCA (சர்வதேச காங்கிரஸ் மற்றும் மாநாட்டு சங்கம்) தொகுத்து வழங்கிய ஒரு மூலோபாய மீட்பு வேலைச்சட்டகமாகும். ICCA சங்கத்தின்படி, MICE சுற்றுலா தொழிலையும் மற்றும் அதன் உறுப்பினர்களையும் பாதிக்கின்ற முக்கிய பேரண்ட மற்றும் நுண் சுற்றுலா போக்குகள், MICE சுற்றுலா துறையின் மூலமான செயற்படுத்துகையை கருத்திற் கொள்வதற்குரிய முக்கிய திறமுறைத் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் வெற்றிகரமான புதிய சுற்றுலா நிகழ்ச்சித் திட்டம் பற்றிய அளவுகோல்கள் என்பவற்றை இனங்கண்டறிவது இந்த மூலோபாயத் திட்டத்தின் நோக்கமாகும்.

இ) 10 உயர்ந்த உன்னத பூகோள நுகர்வோர் போக்குகள் 2021 : எதிர்வருகின்ற ஆண்டுகளில் வலிமை பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற இனங்காணக் கூடிய பரிணமிக்கும் மற்றும் துரிதமாக நகர்ந்து செல்லும் 'சர்வதேச ஐரோப்பிய கண்காணிப்பு போக்குகள்' பற்றிய விபரங்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இத்தகைய போக்குகள் மாறிவருகின்ற நுகர்வோர் விழுமியங்களை புரிந்து கொள்வதற்கும் மற்றும் நுகர்வோர் நடத்தை உலகலாவிய ரீதியில் வணிகத்தை எவ்வாறு நகரச் செய்கின்றது மற்றும் அத்தகைய நடத்தை அத்தகைய வணிகத்தில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை ஆராய்ந்து பார்ப்பதற்கும் தேவையான அறிவைப் பெற்றுக் கொடுக்கின்றன.


ஈ) 2020 GBTA BTI™ கண்ணோட்டம் - வருடாந்த பூகோள அறிக்கை மற்றும் 2020 - 2024 ஆம் ஆண்டு காலப் பகுதிற்கான எதிர்வுகூறல்

### 1.3 MICE சுற்றுலா பற்றிய புள்ளி விபரங்கள்


முகாமைத்துவ சபை பிறப்பித்த ஒரு கட்டளையின் பிரகாரம், TDL கட்டணத்தை செலுத்தும் நேரத்தில் சுற்றுலா தொழில் துறையிலிருந்து MICE சுற்றுலா தரவுகளை சேகரிக்கும் பொருட்டு TDL கட்டண செலுத்துகைப் படிவங்களுக்கு ஒரு பின்னிணைப்பை சேர்க்கும் பொருட்டு இ.மா.ப. 2020 ஆம் ஆண்டு ஒரு வேண்டுகோளை விடுத்திருந்தது.

எனினும், MICE சுற்றுலா தொழில் துறை உறுப்பினர்கள் தமது MICE சற்றுலா தரவுகளை வழங்கவில்லை என 2021 ஆம் ஆண்டு மூன்றாவது காலாண்டு இறுதியில் இ.மா.ப. கண்டறிந்தது. ஆகையால், அதன் விளைவாக இ.மா.ப. சுற்றுலா துறை உறுப்பினர்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு தேவையான MICE சுற்றுலா தரவுகளை பெற்றுக் கொள்ளும் முன்னைய நுட்பத்தை மாற்ற இ.மா.ப. நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது. சுற்றுலா தொழிலில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள தரவுகள் பற்றிய சுருக்கமான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

கீழ்காணும் வரைபு, பதிவாகியிருந்த மொத்த MICE சுற்றுலா நிகழ்ச்சித் திட்டங்களில், ஒவ்வொரு வகுதியிலும் நடத்திய MICE சுற்றுலா நிகழ்ச்சித் திட்டங்களின் விகித அடிப்படையை சுட்டிக் காட்டுகின்றது.




நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்யும் சில தரப்புகள் தாம் திட்டமிட்டிருந்த தமது MICE சுற்றுலா நிகழ்ச்சித் திட்டங்களை கோவிட்-19 தொற்று நோய் அச்சுறுத்தலின் ஏற்றத்தாழ்வு அடிப்படையில் சுகாதாரப் பிரிவு வழங்கிய வழிகாட்டல்களை பின்பற்றி, தமது அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களை கலப்பு மற்றும் மெய்நிகர் நிகழ்ச்சித் திட்டங்களாக மாற்றி நடத்தியது.




### 1.4 இ.மா.ப. சுற்றுலா வாடிக்கையாளர் தரப்பு தரவுத் தளம்

வெளிநாட்டு MICE சுற்றுலா வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்ளக் கூடிய விபரங்கள் அடங்கிய இ.மா.ப. MICE சுற்றுலா வாடிக்கையாளர் தரவுத் தளம், வருடம் முழுதிலும் ஒன்லைனின் ஊடாக அணுகப்பட்டது. இலக்குக் கொள்ளப்பட்டுள்ள தமது சுற்றுலா சந்தைப்படுத்தல் செயற்பாடுகளின் நிமித்தம் சுற்றுலா வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்ளக் கூடிய விபரங்களை உள்நாட்டு MICE சுற்றுலா தொழில் தரப்புகள் பயன்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2. சந்தைப்படுத்தல்

கூட்டங்கள், ஊக்குவிப்புகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றுக்கான சுற்றுலா ஸ்தலம் என்ற வகையில் இலங்கையை MICE சுற்றுலாவுக்காகவும் மற்றும் சுற்றுலா குறிப்பு விபரங்களுக்காகவும் சந்தைப்படுத்துவதும் மற்றும் விளம்பரப்படுத்துவதும் இ.மா.ப. சுற்றுலா சந்தைப்படுத்தல் பிரிவின் ஆரம்ப அடிப்படைப் பொறுப்பாகும்.

கோவிட்-19 தொற்று நோய் பரவிய போதிலும் கூட கீழ்காணும் சுற்றுலா சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

### 2.1 MICE சுற்றுலா வீடியோக்கள் தயாரிப்பு

ஒவ்வொன்றும் ஒரு நிமிடம் உடைய நான்கு MICE சுற்றுலா வீடியோக்கள் தயாரிக்கப்பட்டன. இந்த வீடியோக்களில் MICE சுற்றுலாவின் நான்கு முக்கிய அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன. முதலாவது வீடியோ 'கொழும்பு நகரத்தில் ஒரு MICE சுற்றுலா பயணியின் நாள்' எனும் கருப்பொருளில் தயாரிக்கப்பட்டது. இரண்டாவது வீடியோ இலங்கையின் தென் மாகாணத்தில் காணப்படும் MICE சுற்றுலா வசதிகளை காண்பிக்கும் பொருட்டு தயாரிக்கப்பட்டது. வட பிராந்திய MICE சுற்றுலா ஸ்தலங்கள், சுற்றுலா கவர்ச்சி ஸ்தலங்கள் மற்றும் சுற்றுலா நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன மூன்றாவது வீடியோவிலும் மற்றும் நான்காவது வீடியோவிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும், 30 செக்கன்கள் உடைய 10 வீடியோக்களும் குறித்த ஆண்டு காலப் பகுதியில் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை ஊக்குவிக்கும் பொருட்டு தயாரிக்கப்பட்டன.

## 2.2 விளம்பர ஆவணங்களை தயாரித்து அச்சிடுதல்

இ.மா.ப. இணையத் தளம் புதுப்பிக்கப்பட்ட காலப் பகுதியில், இ.மா.ப. இணையத்தள URL வசதி www.visitsrilanka.net இல் இருந்து www.visitsrilanka.net எனும் இணையத் தளத்திற்கு மாற்றப்பட்டது. இ.மா.ப. தனது இ.மா.ப. சுற்றுலா வணிகத்தை விளம்பரப்படுத்தும் துணியிலான உறைகள் மீதான புதிய ஒரு இணையத் தள URL ஐ அச்சிட்டது. இ.மா.ப. MICE சுற்றுலாவை விளம்பரப்படுத்திய போது வெகுமானமாக பகிர்ந்தளிக்கும் பொருட்டு இந்த துணியிலான உறைகள் தயாரிக்கப்பட்டன.

## 2.3 இணையத்தள மைய விளம்பரங்கள் / டிஜிட்டல் மைய விளம்பரங்கள் / SEO பணி

அ) இ.மா.ப. இணையத் தளம் - www.meetinsrilanka.com எனும் இ.மா.ப. இணையத் தளம் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் கூட்டொத்துழைப்பில் பேணிப் பராமரிக்கப்பட்டது. புதிய சிறப்பம்சங்கள் இந்த இணையத் தளத்தில் சேர்க்கப்பட்டன. உதாரணமாக: கோவிட்-19 தொற்று நோய் பற்றிய இற்றைப்படுத்தல்கள், ப்லொக் பக்கம், சந்தாதாரர் படிவம் முதலியன.

ஆ) சமூக ஊடக பிரச்சார நடவடிக்கை - 'இலங்கையில் சந்தித்தல்' எனும் தொணிப்பொருளில் இ.மா.ப. தனது சுற்றுலா சேவையை சமூக ஊடகங்களினுள் பல்வகைப்படுத்தியது. குறித்த பிரச்சார நடவடிக்கை 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதுவே இ.மா.ப. முதல் முதலாவது மேற்கொண்டிருந்த முதன்மை சமூக ஊடக பிரச்சாரமாகும். இந்தப் பிரச்சாரம் முகநூல், லிங்ட்இன், டுவிட்டர், இன்ஸ்டெகிராம் மற்றும் யூ டியூப் என்பவற்றில் பரவலாக செய்யப்பட்டது.

உலகலாவிய ரீதியில் பயணத் தடைகள் விதிக்கப்பட்டமையாலும் மற்றும் தனிப்படுத்தும் செயல்முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டமையாலும், இ.மா.ப. ஒப்பீட்டு ரீதியில் குறைந்த செலவு வாய்ந்த, பயனுள்ள ஒரு விதத்தில் கேட்போர் இலக்கை அடைந்து கொள்ளும் பொருட்டு சமூக உடகங்களில் தனது கவனத்தை செலுத்தியது. இ.மா.ப. சமூக ஊடகங்களின் ஊடாக விளம்பரங்களை செய்ததால், சுற்றுலா இலக்கு சந்தைகளுக்கான தனித்துவம் வாய்ந்த விழுமிய எண்ணங்களை (USPs) இந்த பணியகத்தினால் பரம்பல் செய்ய முடிந்தது.

கடந்த காலத்தில், இ.மா.ப. வணிக சந்தைகள், நாட்டை சுற்றுலாவின் நிமித்தம் விளம்பரப்படுத்தல் மற்றும் பரிட்சய சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல் முதலிய விடங்களில் முக்கிய கவனம் செலுத்தியது. கொவிட் தொற்று நோய் பரவியதையடுத்து, இ.மா.ப. தனது பிரச்சார நடவடிக்கைகளை டிஜிட்டல் விளம்பர முறைக்கு மாற்றியது. MICE சுற்றுலாவை பேணுவதும் மற்றும் இலங்கையை உயிருள்ள சுற்றுலா ஸ்தலமாக விளம்பரப்படுத்துவதும் இ.மா.ப. இன் நோக்கமாக இருந்தது. குறித்த இந்த பிரச்சார நடவடிக்கை MICE சுற்றுலாவுக்கும் மற்றும் ஓய்வுக்குமான ஒரு ஸ்தலம் என்பதால் சர்வதேச ரீதியில் சுற்றுலா ஸ்தலப் போட்டியையும் மற்றும் சுற்றுலா கவர்ச்சியையும் மேம்படுத்தியது.

இந்தப் பிரச்சார நடவடிக்கையின் ஊடாக, இ.மா.ப. சுற்றுலா ஸ்தல அருமை, உண்மைத் தன்மை மற்றும் பல்லினத்துவம் முதலிய விடய அம்சங்களை அறிவிப்பதன் மூலம் 'இலங்கையில் சந்தித்தல்' எனும் குறிக்கோளை மீள்நிலைப்படுத்த எதிர்பார்த்தது.

மார்ச் மாதம் 15 ஆம் திகதி முதல் திசம்பர் மாதம் 14 ஆம் திகதி வரையான 09 மாத காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள செயலாற்றுகை பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.




இ) MICE சுற்றுலா மற்றும் வணிக நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நுண் தளங்கள் - குறித்த ஆண்டு காலப் பகுதியில், இ.மா.ப. வணிக நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஒரு நுண் தளத்தை அபிவிருத்தி செய்யும் முகமாக ஒரு பணியை ஆரம்பித்தது. குறித்த நுண் தளம் www.srilanka.travel/helloagain

என்ற தளத்தை ஒத்த www.rilanka.travelh தளத்திற்கு தனது சுற்றுலா 'வணிக நிகழ்ச்சித் திட்டங்களை' கூட்டிணைக்கும் பொருட்டு அபிவிருத்தி செய்யப்பட்டது. முகத்தோற்றக் குறிப்பும் மற்றும் ஆரம்ப உள்ளடக்க விடயங்களும் குறித்த முன்னெடுப்புத் திட்டத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டன.

ஈ) இ.மா.ப. MICE சுற்றுலா அக்கறையுடைய தரப்பு 'மின்னஞ்சல் விளம்பரப்படுத்தல்' பிரச்சார நடவடிக்கை

இ.மா.ப. சுற்றுலாவை சந்தைப்படுத்தும் மற்றும் விளம்பரப்படுத்தும் செயற்பாடுகளின் போது பயன்படுத்தும் முகமாக ஒரு வருட காலத்திற்கு www.sendpulse.com என்ற இணையத் தள வசதியிலிருந்து தொகையளவான ஒரு மின்னஞ்சல் வசதியை கொள்வனவு செய்தது. ஆகையால், ஒன்லைன் ஊடாக US டொலர் கொடுப்பனவை செய்து, இ.மா.ப. பணியகத்தினால் நேரடியாக அந்த மின்னஞ்சல் வசதியை கொள்வனவு செய்ய முடியவில்லை. குறித்த வசதி இ.மா.ப. நியமித்த டிஜிட்டல் சந்தைப்படுத்தல் கம்பனியின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்டது. இ.மா.ப. 2021 மெய்நிகர் MICE எக்ஸ்போ I விளம்பரப்படுத்தும் முகமாக மேற்குறித்த வசதியை பயன்படுத்தியது.

### 2.4 உள்நாட்டு மற்றும் சர்வதேச விளம்பரங்கள்

இ.மா.ப. குறித்த ஆண்டு காலப் பகுதியில் பயண செய்திகள் சஞ்சிகை (TND) பற்றி இந்தியாவில் விளம்பரம் செய்தது. இந்த TND சஞ்சிகையில் ஐந்து விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டன. 2021 MICE எக்ஸ்போ நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணங்க, இ.மா.ப. 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் டெய்லி FT இல் ஒரு முழுப்பக்க குறைநிரப்புப் பத்திரத்தை பிரசுரித்தது. குறித்த ஆண்டு காலப் பகுதியில், இ.மா.ப. இலங்கை நாட்டு அறிக்கையின் நிமித்தம் பிராந்திய TTG MENA இல் MICE சுற்றுலா இற்றைப்படுத்தல்களை சமர்ப்பித்தது. ஏனைய சர்வதேச சஞ்சிகைகளில் விளம்பரம் செய்யும் செயற்பாடுகள் குறித்த ஆண்டு காலப் பகுதியில் கோவிட் தொற்று நோய் நிலவரம் நிலவியதால் மேற்கொள்ளப்படவில்லை. குறித்த செயற்பாடுகள் 2022 ஆம் ஆண்டின் நிமித்தம் கருத்திற் கொள்ளப்படும்.

### 2.5 வெளிநாட்டு கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் / விளம்பரங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் என்பவற்றில் பங்குபற்றல்

தொற்று நோய் நிலவரத்தினால், இ.மா.ப. சர்வதேச MICE சுற்றுலா கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களை அல்லது நாட்டிற்கென்றே குறித்த MICE சுற்றுலா விளம்பர செயற்பாடுகளை ஏற்பாடு செய்யவில்லை. தொற்று நோய் நிலவிய காரணத்தால், சர்வதேச கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பிற்போடப்பட்டன அல்லது இரத்துச் செய்யப்பட்டன. ஒரு சில நிகழ்ச்சித் திட்டங்கள் மெய்நிகர் அடிப்படையில் நடத்தப்பட்டன. 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி முதல் 09 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற ITB மெய்நிகர் மாநாட்டில் இ.மா.ப. பங்குபற்றியது. '2021 ஆம் ஆண்டிற்கான சுற்றுலா தொழில் மீட்பு மற்றும் திட்டங்கள்' என்ற பெயரில் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையாக நடைபெற்ற மாநாட்டில் இலங்கை சுற்றுலா தலைவர் கலந்து கொண்டார்.

### 2.6 MICE பரிட்சய சுற்றுலாக்கள்

2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத காலப் பகுதியில் இந்திய MICE முகவர்களின் நிமித்தம் இ.மா.ப. மெய்நிகர் பரிட்சய சுற்றுலாவை ஏற்பாடு செய்திருந்தது. இதுவே இ.மா.ப. முதல் முதலாக ஏற்பாடு செய்த மெய்நிகர் பரிட்சய சுற்றுலாவாகும். இந்த சுற்றுலா நிகழ்ச்சித் திட்டம் கொழும்பு MICE சுற்றுலா வசதிகளையும் மற்றும் கவர்ச்சியான சுற்றுலா அம்சங்களையும் பிரதிபலித்தது.





செல்வாக்கு செலுத்தும் MICE சுற்றுலா வசதி நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணங்க, இ.மா.ப. இலங்கையில் காணப்படும் MICE சுற்றுலா வாய்ப்புக்களை மேம்படுத்தும் முகமாக இந்திய வெளிவாரி (IO) ஊடக பிரதிநிதிகள் குழுவின் நிமித்தம் ஒரு சுற்றுலா விஜயத்தை ஏற்பாடு செய்திருந்தது. இந்த இந்திய வெளிவாரியானது இந்தியாவிலுள்ள ஒரேயொரு B2B சுற்றுலா பயண தளமாகும். இந்தியாவில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு சுற்றுலா ஸ்தலங்களை விளம்பரம் செய்யும் பொருட்டு முற்றிலும் அர்ப்பணிப்பு வாய்ந்த அச்சீட்டு சஞ்சிகை, இணையத் தளம், ஒன்லைன் தொ.கா. அலைவரிசை மற்றும் துல்லியமான சமூக ஊடக தளங்கள் என்பன இந்த இந்திய வெளிவாரி சுற்றுலா பயண தளத்தில் உள்ளடங்குகின்றன. குறித்த விஜயம் 2021 ஆம் ஆண்டிற்கான மெய்நிகர் MICE எக்ஸ்போ நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த ஆண்டு காலப் பகுதியில், இந்திய சுற்றுலா இயக்கு தரப்புகளுக்கும் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் என ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் ஏற்பாடு செய்திருந்த பரிட்சய சுற்றுலாவுக்கு இ.மா.ப. தனது பங்களிப்பை நல்கியது. குறித்த பரிட்சய சுற்றுலாவின் செலவில் ஒரு பாகத்தை இ.மா.ப. பொறுப்பேற்றது.

பயணத் தடைகள் விதிக்கப்பட்டிருந்ததால் பௌதீக பரிட்சய சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யப்படவில்லை.

## 2.7 இலங்கை மெய்நிகர் MICE எக்ஸ்போ 2021

இலங்கையின் அங்குரார்ப்பண மெய்நிகர் MICE எக்ஸ்போ 2021 இலங்கையின் தொழில் மாநாட்டு, கண்காட்சி மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாட்டுத் தரப்புகள் சங்கத்தின் (SLAPCEO) ஒத்துழைப்பில் இ.மா.ப. ஏற்பாடு செய்தது. இது 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ஆம் திகதி முதல் 3 ஆம் திகதி வரை நடத்தப்பட்டது. கூட்டங்கள் / மாநாடுகள், கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள், திருமண வைபவங்கள் மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை ஏற்பாடு செய்யும் தரப்புகளுக்கான நான்கு வணிக கூட்டங்களும் மற்றும் பதிவு பெற்ற 487 சர்வதேச சுற்றுலா வாடிக்கையாளர்கள் பங்குபற்றிய 70 எண்ணிக்கைக்கும் அதிகமான மெய்நகர் கண்காட்சிக் கொட்டைகளும் குறித்த இந்த மெய்நகர் எக்ஸ்போ கண்காட்சியில் உள்ளடங்கியிருந்தன. இந்த 2021 எக்ஸ்போ கண்காட்சிக்கு இணையாக பிரதான MICE சுற்றலா சவால் வினா விடைப் புதிர் போட்டி அடங்கலாக இலங்கையில் சந்தித்தல் வீடியோ சேகரிப்பு திட்டம், மதிய போஷன பசுமை நிகழ்ச்சிகள் முன்னெடுப்புத் திட்டங்கள், மெய்நிகர் தேநீர் அனுபவம், இலங்கை உணவு சமையல் அனுபவம் என்பன போன்ற நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பிரதானமாக பீ.எம்.ஐ. சி.எச். இந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அனுசரணை அளித்தது. வோர்டர் சேஜ் ஹோட்டல் துணை அனுசரணை தரப்பாக இணைந்து கொண்டது. கோவிட் தொற்று நோயின் பின்னர் MICE சுற்றுலா குழுக்களை வரவேற்கும் முகமாக சுற்றுலா ஆயத்தத்தையும் மற்றும் போட்டித் தன்மையையும் பிரதிபலித்துக் காட்டுவது இந்த நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்ததன் முக்கிய குறிக்கோளாகும்.






### 2.8 வெபினார்கள்

இலங்கையை சர்வதேச சுற்றுலா பயணிகளின் நிமித்தம் திறந்து விடுவதற்கு இணங்க, 'இலங்கை MICE சுற்றுலா பயணிகளையும் மற்றும் அத்தகைய சுற்றுலா குழுக்களையும் வரவேற்க தயாராகவுள்ளது' எனும் செய்தியை விடுக்கும் பொருட்டு, சில முக்கியமான சுற்றுலா சந்தைகளில் இ.மா.ப. வெபினார் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கையிலும் மற்றும் இந்தியாவிலும் MICE சுற்றுலாவை தாபிக்கும் குறிக்கோளுக்கு இணங்க '2021 ஆம் ஆண்டை MICE சுற்றுலாவுக்கு தயார்படுத்தல்' தொடர்பான ஒரு வெபினார் கருத்தரங்கை மும்பாயிலுள்ள இலங்கை தூதுவர் நாயகத்தின் ஒத்துழைப்பில் ஏற்பாடு செய்திருந்தது. குறித்த வெபினார் கருத்தரங்கு 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டது.

'இலங்கையை ஒரு விடுமுறை வணிக சுற்றுலா ஸ்தலமாக பிரகாசிக்கச் செய்தல்' எனும் தலைப்பில் இந்திய இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்திலும் (ISCCI) மற்றும் புது தில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானகரினதும் கூட்டொத்துழைப்பில், இ.மா.ப. ஒரு வெபினார் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது. இலங்கையில் கிடைக்கக் கூடிய இலங்கை சுற்றுலாவிலும் மற்றும் சுற்றுலா வணிக வாய்ப்புகளிலும் இந்தக் கருத்தரங்கு ஒருமுகப்பட்டிருந்தது. இது 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி நடத்தப்பட்டது.

பங்காளதேஷத்திலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரின் ஒத்துழைப்பில் இ.மா.ப. MICE சுற்றுலா பற்றிய ஒரு பரஸ்பர வெபினார் கருத்தரங்கை 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

### 2.9 இ.மா.ப. MICE சுற்றுலா பயணிகள் உதவித் திட்டமும் நிகழ்ச்சித் திட்ட ஆதரவும்

இ.மா.ப. MICE சுற்றுலா பயணிகள் உதவித் திட்டம் சகல வகை பௌதீக, கலப்பு மற்றும் மெய்நிகர் நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கி சுற்றுலா தொழில் உதவியின் நிமித்தம் காணப்படுகின்றது. குறித்த திட்டம் பற்றிய E ப்கலையர் இ.மா.ப. இயணத் தளத்திற்கு மேலேற்றம் செய்யப்பட்டது. எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டின் நிமித்தம் திட்டமிடப்பட்டிருந்த அநேகமான நிகழ்ச்சித் திட்டங்கள் கோவிட்-19 தொற்று நோய் காரணமாக இரத்துச் செய்யப்பட்டன. குறித்த ஆண்டு காலப் பகுதியில், இ.மா.ப. மெய்நிகர் மற்றும் கலப்பு அமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்பது நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவளித்தது.

### 2.10 உலக சுற்றுப் பிரயாண வழிகள் பற்றிய மாநாடு 2021

2021 ஆம் ஆண்டு ஒக்றோபர் மாதம் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை ஏற்பாடு செய்யப்பட்டு நடத்திய உலக சுற்றுப் பிரயாண வழிகள் பற்றிய மாநாட்டில் இ.மா.ப. கலந்து கொண்டது. குறித்த நிகழ்ச்சித் திட்டம் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்துடன் (இ.சு.ஊ.ப.) இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கை சுற்றுலா தலைவரும் மற்றும் இலங்கை எயார்லைன்ஸ் நிறுவனத்தின் தலைவரும் இந்த மெய்நிகர் நிகழ்ச்சித் திட்டத்தில் உரை நிகழ்த்தினர். விமான வழிப் பயணங்களை மேலும் மேம்படுத்துதல், சுற்றுலாவையும் மற்றும் MICE வாய்ப்புகளையும் மேம்படுத்துதல் மேற்குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்தது.

உலக சுற்றுப் பிரயாண வழியானது சுற்றுலா ஸ்தலங்களுக்கு புதிய விமான சேவைகளை வழங்கும் பொருட்டு விமான சேவைகள் அக்கறையுடைய தரப்புகளுடனும் மற்றும் சுற்றுலா நிறுவனங்களுடனும் நடைபெற்ற கலந்துரையாடலின் ஊடாக கிடைத்த ஒரு B2B வசதித் தளமாகும். புதிய விமான சேவைகளை அபிவிருத்தி செய்வது ஒரு சுற்றுலா ஸ்தலத்திற்கு அதிகளவான சுற்றுலா பயணிகளை கவர்வதற்கான புதிய ஆரம்பப் புள்ளியாக விளங்கியது. விமான சேவை மற்றும் சுற்றுலா தொழில் ஆகியவற்றின் தலைவர்களான உரைநிகழ்த்துபவர்கள் சம்பந்தப்படுகின்ற முக்கியமான அக்கறையுடைய தரப்பு மாநாடுகள் மற்றும் பல வகை நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றின் ஊடாக சுற்றுலா வலையமைப்பு வாய்ப்புகளும் மற்றும் மேலும் மேம்பாடுகளும் பற்றி கலந்துரையாடும் பொருட்டு இந்த சுற்றுப் பிரயாண வழிகள் பற்றிய மாநாடு சகல விமான சேவை மற்றும் சுற்றுலா அக்கறையுடைய தரப்புகளையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவந்தது.

### 2.11 MICE சுற்றுலா பற்றிய அமைச்சரவைப் பத்திரம்

இ.மா.ப. MICE சுற்றுலா / சுற்றுலா வணிகம் பற்றிய புள்ளி விபரங்களை தயாரிப்பதற்கான முறைசார்ந்த முறையியல் இல்லாமை விடயத்தை அடையாளப்படுத்தும் முகமாக MICE சுற்றுலா தொடர்பான ஒரு அமைச்சரவைப் பத்திரத்தையும் தயாரித்தது. BIA விமான நிலையத்தில் MICE சுற்றுலா பயணிகளுக்கான தனியான ஒரு கருமபீடமும் மற்றும் குடியகல்வு வருகை அட்டைப் பிரிவில் MICE சுற்றுலா உதவு வசதிகளும் (கூட்டங்கள், மாநாடுகள், ஊக்குவிப்புகள் மற்றும் கண்காட்சிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் முதலியன) அடங்கலாக இ.மா.ப. MICE சுற்றுலாவுக்கான புதிய ஒரு வீசா வகுதியை அறிமுகப்படுத்தி சுற்றுலா வீசாவாக சம கட்டணங்களை அறவிடுவதற்கு முன்மொழிந்தது. சுற்றுலா அமைச்சு குறித்த ஆண்டு காலப் பகுதியில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு அதன் அவதானிப்புகளின் நிமித்தம் குறித்த அமைச்சரவைப் பத்திரத்தை அனுப்பி வைத்துள்ளது.

## 3. மனித வளங்கள் மற்றும் நிருவாகம்

### 3.1 இ.மா.ப. பதவியணி பற்றிய விபரம்

| | |
|---|---|
| திருமதி. கிமர்லி பெர்னாந்து | - தலைவர் |
| திரு. கிரிஷாந்த பெர்னாந்து | - பொது முகாமையாளர் |
| திருமதி. அச்சினி தந்துன்னகே | - சிரேஷ்ட முகாமையாளர் |
| திருமதி. குமுது ஹென்னெடிகே | - ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி முகாமையாளர் |
| திருமதி. மல்காந்தி வெலிகல | - சுற்றுலா சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரங்கள் முகாமையாளர் |
| திருமதி. பியுமி பீரிஸ் | - ஆராய்ச்சி, அபிவிருத்தி, வணிகம், நியமங்கள், சங்கக் கூட்டங்கள் உதவி முகாமையாளர் |
| திருமதி. ரன்ஜிகா பெரேரா | - கணக்குகள் மற்றும் நிருவாக உதவி முகாமையாளர் |
| திருமதி. ஹேமாலி மஹமுதலி | - உள்ளகக் கணக்காய்வு உதவி முகாமையாளர் |
| திரு. ஜனித் பாத்யா | - கூட்டுத் தாபனங்கள், ஊக்குவிப்புகள் நிகழ்ச்சிகள் கூட்டங்கள் உதவி முகாமையாளர் |
| திருமதி. லக்ஷிகா பண்டார | - ம.வ. மற்றும் சபை விவகாரங்கள் கனிஷ்ட முகாமையாளர் |
| திருமதி. தினுஷ்கா பொன்சேக்கா | - முகாமைத்துவ உதவியாளர், பொது முகாமையாளருக்கான செயலாளர் |
| திருமதி. தில்ஷானி தாபரே | - கணக்குகள் மற்றும் நிருவாகம் உதவி முகாமையாளர் |
| திருமதி. சமுர்த்தி வாஸ் | - பெறுகை முகாமைத்துவ உதவியாளர் |
| திரு. ப்ரபோதா விஜேசூரிய | - அலுவலக உதவியாளர் |
| திரு. பி.ஜி. சுப்புன் கவ்ஷல்ய | - சாரதி |

## 4. உள்ளகக் கணக்காய்வு

இந்த மாநாட்டுப் பணியகத்தின் நிதி மற்றும் செயற்பாட்டு நியமங்கள் அரசாங்கத்தின் நியமங்களுக்கும் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைவாக காணப்படுகின்றனவா என்பதை இந்த உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு உறுதி செய்யும். எதிர்கால மேம்பாட்டு விடயங்களுக்கான கருத்துரைகள் மற்றும் சிபாரிசுகள் என்பன அடங்கிய ஒன்பது உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் 2021 ஆம் ஆண்டிற்கு வெளியிடப்பட்டன. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு செய்த முயற்சிகளின் பயனாக, உள்ளகக் கட்டுப்பாடுகள் செலவு சேமிப்புகளுக்கும் மற்றும் செயல்முறை நெறிப்படுத்தலுக்கும் பயனாக அமைந்து மேம்பாடுகளை எட்டியுள்ளன. இந்த உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு காலாண்டு ரீதியாக நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களையும் நடத்தியது.

## 5. பொருளாதார பெறுமானம் சேர்வு பற்றிய கூற்று

கூட்டு சமூகப் பொறுப்புக்கள் இன்றைய வணிக சூழ்நிலையில் ஒரு தன்னார்வ செயற்பாடாக ஒரு போதும் கருதப்படுவதில்லை. குறிப்பாக, சுற்றுலா துறை சார் வாடிக்கையாளர், சுற்றாடலில் கவனம் செலுத்துகின்ற சமூக ரீதியில் பொறுப்பு வாய்ந்த தாபனங்களை ஆராய்ச்சி செய்தும் மற்றும் அனுசரணை அளித்தும் வருகின்றனர்.

சமூக ரீதியில் பொறுப்பு வாய்ந்த ஒரு நிறுவனமாக விளங்குகின்ற இ.மா.ப, 2021 ஆம் ஆண்டிற்கு பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியுள்ளது.

- இராஜதந்திரிகள் எயார்லைன் நிறுவன ஊழியர்கள், வணிக கூடகங்கள் மற்றும் வணிக சங்கங்கள், சுற்றுலா ஸ்தல முகாமைத்துவ நிறுவனங்கள், தொழில் சார் மாநாட்டு ஏற்பாட்டுத் தரப்புகள், அரச அதிகாரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் முதலிய தரப்புகள் உள்ளடங்கலாக பல துறை அக்கறையுடைய தரப்புகளுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு MICE சுற்றுலா பற்றிய 'இ.மா.ப தலைவரின் சந்திப்புக் கூட்டம்' என்ற ஒரு தலைப்பில் ஐந்து MICE சுற்றுலா சந்திப்புக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டன.
- இலங்கையில் உள்ள பிராந்திய ஹோட்டல் உரிமையாளர்களின் நன்மை கருதி 'இலங்கையின் MICE சுற்றுலாவை மீள்விவரிக்கும் MICE UP என்ற ஒரு கருப்பொருளின் கீழ் சகல பிராந்தியங்களும் உள்ளடங்கும் வகையில் ஒரு மெய்நிகர் நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.
- '2021 எக்ஸ்ப்லோர்' என்ற ஒரு கருப்பொருளின் கீழ் கொழும்பில் இருந்து பேருவளை வரைக்கும் மற்றும் கொழும்பில் இருந்து வைக்கல வரைக்கும் உரிய பிரதேசங்களில் அமைந்திருக்கும் புதிய மற்றும் தனித்துவமான MICE சுற்றுலா ஸ்தலங்கள் பற்றிய முதலாவது மெய்நிகர் பரிட்சய சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டது.
- 'MICE சுற்றுலாப் பயணிகளையும் சுற்றுலாக் குழுக்களையும் வரவேற்க இலங்கை தயாராகவுள்ளது' என்ற செய்தியை விடுக்கும் முகமாக முக்கிய சுற்றலா சந்தைகளில் தொடர் மெய்நிகர் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப் பட்டன - புது டில்லி, மும்பாய் மற்றும் பங்காளதேஷம்.
- கோவிட்-19 தொற்றுநோய் நிலவரத்தால் சுற்றுலாப் பயண கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்ததால், இந்தியாவில் இருந்து தேர்ந்தெடுத்த MICE சார்ந்த சுற்றுலா வாடிக்கையாளர்களுக்கு மெய்நிகர் ஊடாக கொழும்பில் உள்ள MICE சுற்றுலா ஸ்தலங்களும் மற்றும் சுற்றுலா கவர்ச்சியுடைய இடங்களும் ஆக்கபூர்வமாக காட்சிப்படுத்தப்பட்டன. சகல பங்குபற்றுநர்களுக்கும் 2022 ஆம் ஆண்டில் இ.மா.ப நான்கு பௌதீக FAM சுற்றுலா சார் வாய்ப்புக்களை வழங்கியது.
- கோவிட்-19 தொற்றுநோய் நிலவரத்தால் சுற்றுலா பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தமையாலும் மற்றும் இலங்கையை அடுத்த MICE சார்ந்த சுற்றுலா ஸ்தலமாக விளம்பரப்படுத்த இருந்தமையாலும், முதலாவது மெய்நிகர் 'இலங்கை MICE எக்ஸ்போ 2021' கண்காட்சி நடத்தப்பட்டது. ஒன்லைன் சந்திப்புத் தளத்தின் ஊடாக உள்நாட்டு MICE சுற்றுலா தொழில் பங்குபற்றுநர்களை சந்திக்கச்செய்யும் வகையில், பதிவு செய்திருந்த 450 சர்வதேச சுற்றுலா வாடிக்கையாளர்களுக்கும் அதிக அத்தகைய சுற்றுலா வாடிக்கையாளர்களை கவர்ந்தது.

## 6. 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள்

**இலங்கை மாநாட்டுப் பணியகம்**

**2021 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள**

**நிதி நிலைக் கூற்று**

| | குறிப்புகள் | 2020 ரூ. | 2020 ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| நடைமுறை சார்ந்த சொத்துக்கள் | | | |
| காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் | 15 | 43,831,906 | 142,921,242 |
| வருமதிகள் | 16 | 38,644,799 | 31,107,992 |
| முற்கொடுப்பனவுகள் | 17 | 554,286 | 1,987,970 |
| இருப்புக்கள் | 18 | 3,706,055 | 3,747,097 |
| வைப்புக்கள் | 20 | 82,000 | 80,000 |
| குறுங்கால நிலையான வைப்புக்கள் | | 157,146,562 | 85,509,747 |
| **மொத்த நடைமுறை சார்ந்த சொத்துக்கள்** | | **243,965,609** | **265,354,048** |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் | 19 | 3,619,417 | 3,614,240 |
| நீண்ட கால முதலீடுகள் | 21 | 132,000,000 | 100,000,000 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | **135,619,417** | **103,614,240** |
| **மொத்த சொத்துக்கள்** | | **379,585,026** | **368,968,288** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறை சார்ந்த பொறுப்புக்கள்** | | | |
| கடன்களும் மற்றும் திரண்ட செலவுகளும் | 22 | 2,282,074 | 5,486,496 |
| மொத்த நடைமுறை சார்ந்த பொறுப்புக்கள் | | | |
| **நீண்ட காலப் பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய பணிக் கொடைக்கான நிதி ஏற்பாடுக்கள் | | 4,368,780 | 3,681,530 |
| **மொத்த நீண்ட காலப் பொறுப்புக்கள்** | | | |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **6,650,854** | **9,168,026** |
| தேறிய சொத்துக்கள் | | 372,934,172 | 359,800,262 |
| **தேறிய சொத்துக்கள் / ஒப்புரவுகள்** | | | |
| மூலதனப் பங்களிப்பு | | 10,457,784 | 10,457,784 |
| திரண்ட மிகை / (பற்றாக்குறை) | 23 | 362,476,388 | 349,342,479 |
| மொத்த தேறிய சொத்துக்கள் / ஒப்புரவுகள் | | **372,934,172** | **359,800,262** |

இலங்கை நிதி அறிக்கையிடுகை நியமங்களினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தினதும் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க இலங்கை சுற்றுலா சட்டத்தினதும் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப் பட்டுள்ளதாக நிதி உதவி முகாமையாளர் சான்றுபடுத்துகின்றார்.

கணக்குகள் தயாரிக்கப்பட்டது.
ரஞ்ஜிகா பெரேரா
உதவி முகாயமையாளர் (நிதி)

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பாகும்.
இந்த நிதிக் கூற்றுக்கள் 2022.03.22 ஆம் திகதி பணிப்பாளர்கள் சபையினால் அதிகாரமளிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

.....
கரிஷ்ணந்த பொனாந்து
பொது முகாமையாளர்
இலங்கை மாநாட்டுப் பணியகம்

.....
தம்மிக கே. விஜேசிங்க
சபை உறுப்பினர்
இலங்கை மாநாட்டுப் பணியகம்

.....
கிமர்லி பெர்னாந்து
தலைவர்
இலங்கை மாநாட்டுப் பணியகம்

.....
சுனில் திஸாநாயக்க
சபை உறுப்பினர்
இலங்கை மாநாட்டுப் பணியகம்

**இலங்கை மாநாட்டுப் பணியகம்**

## 2021 ஆம் ஆண்டிற்கான நிதி சார்ந்த செயலாற்றுகை பற்றிய கூற்று

| | குறிப்பு | 2021 உண்மையான ரூ. | 2021 வரவு செலவுத் திட்டம் ரூ. | 2020 உண்மையான ரூ. | 2020 வரவு செலவுத் திட்டம் ரூ. |
|---|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | | |
| தரை இறங்கும் கட்டணம் | | 19,359,129 | 11,763,185 | 19,580,140 | 24,594,643 |
| சுற்றுலா அபிவிருத்திக் கட்டணம் | | 32,638,821 | 22,187,488 | 21,624,709 | 11,573,950 |
| ஏனைய வருமானம் | 6 | 11,183,884 | 16,500,000 | 18,570,548 | 18,000,000 |
| **மொத்த வருமானம்** | | **63,181,833** | **50,450,673** | **59,775,397** | **54,168,593** |
| **செலவுகள்** | | | | | |
| வேதனங்கள், சம்பளங்கள் மற்றும் ஊழியர் நன்மைகள் | 7 | 20,550,236 | 23,620,000 | 20,827,889 | 22,025,000 |
| வழங்கல்கள் மற்றும் பயன்படுத்திய நுகர்வுப் பொருட்கள் | 8 | 5,999,884 | 7,580,000 | 5,218,389 | 5,880,000 |
| சந்தைப்படுத்தல் சம்பந்தமான செலவினம் | 9 | 16,263,717 | 23,700,000 | 47,042,237 | 73,476,000 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 10 | 2,674,035 | 3,375,000 | 604,031 | 4,225,000 |
| உள்நாட்டு சங்கங்கள் மற்றும் சர்வதேச சங்கங்கள் ஆகியவற்றுடனான இணைப்பு | 11 | 3,062,906 | 5,000,000 | 5,592,701 | 12,000,000 |
| தேய்மானம் மற்றும் கழிவு சார்ந்த செலவுகள் | 12 | 624,345 | - | 1,189,842 | - |
| ஏனைய செலவுகள் | 13 | 864,750 | 1,200,000 | 1,177,545 | 1,000,000 |
| நிதி சார்ந்த ஆகுசெலவுகள் | 14 | 8,050 | 20,000 | 15,215 | 20,000 |
| **மொத்த செலவுகள்** | | **50,047,923** | **64,495,000** | **81,667,848** | **118,626,000** |
| குறித்த ஆண்டு காலப் பகுதிக்கான மிகை / (பற்றாக்குறை) | | **13,133,911** | | **(21,892,451)** | |

**இலங்கை மாநாட்டுப் பணியகம்**

**2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான**

## காசுப் பாய்யச்சல்கள் பற்றிய கூற்று

| இயக்கச் செயற்பாடுகளில் இருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள் | 2021 (ரூ.) | 2021 (ரூ.) | 2020 (ரூ.) | 2020 (ரூ.) |
|---|---|---|---|---|
| தேறிய மிகை (பற்றாக்குறை) | | 13,133,911 | | (21,892,451) |
| **சீராக்கல்கள்** | | | | |
| சீராக்கல்கள் | 624,345 | | 1,189,842 | |
| அகற்றல் மீதான இலாபம் | (5,025) | | (1,120,000) | |
| வட்டி வருமானம் | (9,370,844) | | (12,874,615) | |
| பணிக் கொடைக்கான கட்டணம் | 687,250 | (8,064,274) | 667,609 | (12,137,164) |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னருள்ள இயக்கச் செயற்பாட்டு காசுப் பாய்ச்சல்கள் | | 5,069,637 | | (34,029,615) |
| **தொழிற்படு மூலதனத்திற்கான கட்டணம்** | | | | |
| பொருள் பதிவேட்டில் உள்ள (அதிகரிப்பு) / குறைவு | 41,041 | | (548,870) | |
| வருமதிகளில் உள்ள (அதிகரிப்பு) / குறைவு | (12,032,811) | | (9,260,736) | |
| முற்கொடுப்பனவுகளில் உள்ள (அதிகரிப்பு) / குறைவு | 1,783,683 | | 31,712,751 | |
| முற்பணங்களில் உள்ள (அதிகரிப்பு) / குறைவு | (350,000) | | | |
| திரண்ட கடன்களில் உள்ள (அதிகரிப்பு) / குறைவு | (3,315,348) | (13,873,435) | (6,676,232) | 15,226,913 |
| **இயக்கச் செயற்பாடுகளில் இருந்து ஈட்டிய காசு** | | (8,803,798) | | (18,802,702) |
| பணிக் கொடைக்கான கொடுப்பனவு | - | - | (2,685) | (2,685) |
| | | (8,803,798) | | (18,805,387) |
| **முதலீட்டு செயற்பாடுகள்** | | | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் கொள்வனவு | (624,500) | | (15,800) | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் விற்பனை வருமானம் | - | | 1,995,000 | |
| கிடைத்த வட்டி வருமானம் | 13,977,776 | | 13,972,560 | |
| வைப்புக்கள் | (103,638,814) | (90,285,539) | (50,000,000) | (34,048,240) |
| **நிதி சார்ந்த செயற்பாடுகள்** | | | | |
| **நிதி சார்ந்த செயற்பாடுகளில் இருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | | |
| காசு மற்றும் காசு ஒப்புரவுகள் ஆகியவற்றில் உள்ள தேறிய மாற்றங்கள் | | (99,089,337) | | (52,853,627) |
| 2021.01.01 ஆம் திகதியில் உள்ள காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் | | 142,921,242 | | 195,774,869 |
| 2021.12.31 ஆம் திகதியில் உள்ள காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் | | **43,831,906** | | **142,921,242** |

**இலங்கை மாநாட்டுப் பணியகம்**

**2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான**

## தேறிய சொத்து / ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று

| கட்டுப்படுத்தும் நிறுவன உரிமையாளர்களுக்கு சேரவேண்டிய தொகை | குறிப்புகள் | பங்களித்த மூதனம் ரூ. | திரண்ட மிகைகள் / (பற்றாக்குறைகள்) ரூ. | மொத்த தேறிய சொத்துக்கள் / ஒப்புரவுகள் ரூ. |
|---|---|---|---|---|
| முன்கொணரப்படும் 2020 ஜனவரி 1 ஆம் திகதிக்கான நிலுவை | 23 | 10,457,784 | 371,234,929 | |
| 2020 ஆம் ஆண்டிற்கான இலாபம் | | | (21,892,452) | |
| 2021 ஆம் ஆண்டிற்கான இலாபம் | | | 13,133,911 | |
| 2020 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள C/F நிலுவை | | **10,457,784** | **362,476,388** | **372,934,172** |

**இலங்கை மாநாட்டுப் பணியகம்**

**2021 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான**

## கணக்குகளுக்குரிய குறிப்புகள்

### 01 பொதுவான தகவல்கள்

**இலங்கை மாநாட்டுப் பணியகம் (இ.மா.ப)**

இலங்கை மாநாட்டுப் பணியகம் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப் பட்டது. இந்தப் பணிகயத்தின் பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகமும் அதன் பிரதான வணிக ஸ்தலமும் 4-வது மாடி, ஹோட்டல் பாடசாலைக் கட்டிடம், இலக்கம் 78, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரியில் அமைந்துள்ளன.

இ.மா.ப மாநாடுகள், கூட்டிணைந்த கூட்டங்கள், ஊக்குவிப்பு பயணங்கள் மற்றும் கண்காட்சிகள் என்பவற்றை ஊக்குவிப்பதில் ஈடுபடுகின்றது.

### 02 கணக்குகள் தயாரித்தலும் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளும்

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டு வருகின்ற இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப் பட்டுள்ளன. வருமானமும் மற்றும் ஆகுசெலவும் திரட்டப்பட்டு அவை சம்பந்தப்படும் காலப் பகுதிக்கான நிதிக் கூற்றுக்களில் பதியப்பட்டுள்ளன. பொருத்தமானவிடத்து, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ந்து வரும் குறிப்புக்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. கணக்குகளை பாதிக்கின்ற பண வீக்க காரணிகள் நிமித்தம் சீராக்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

### 03 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

சகல சொத்துக்களும், பொறித் தொகுதிகளும் மற்றும் உபகரணங்களும் கொள்வனவு ஆகுசெலவான அல்லது நிர்மாண ஆகுசெலவான வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

உரித்துடமை காலத்திற்கு ஏற்புடைய ஆகுசெலவு அடிப்படையில் தேய்மானம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேய்மான வீதங்கள் நேர் நிரல் முறையியல் அடிப்படையில் கீழே தரப்பட்டுள்ளன.

| சொத்துக்கள் | வீதம் |
|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 10% |
| வாகனங்கள் | 25% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | 10% |

### 04 பொறுப்புக்கள் மற்றும் நிதி ஏற்பாடுகள்

ஐந்தொகை திகதியில் உள்ள சகல பொருண்மையான பொறுப்புக்களும் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 05 ஓய்வூதிய நன்மைகள்

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக் கொடை சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய ஓய்வூதிய நன்மைகளின் நிமித்தம் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடத்தின் தொடர் சேவைக்கு உரிய அரை மாத நடைமுறை சம்பளத்தின் அடிப்படையில் சேவை முடிவுறுத்தல் நன்மைகள் வழங்கப்படுகின்றன. எனினும் 5 வருட நிறைவில் பொறுப்பு உருவாகுகின்றது.

## 06 ஏனைய வருமானம்

| விடயம் | உண்மையான (2021) (ரூ.) | வரவு செலவுத் திட்டம் 2021 (ரூ.) | உண்மையான 2020 (ரூ.) | வரவு செலவுத் திட்டம் 2020 (ரூ.) |
|---|---|---|---|---|
| ஊழியர் கடன் வட்டி வருமானம் | 63,424 | 70,000 | 51,542 | 60,000 |
| பங்குபற்றல் கட்டணங்கள் | - | 500,000 | 80,000 | 1,500,000 |
| கடன் வைப்பு வட்டி | 9,370,844 | 12,000,000 | 12,874,616 | 12,000,000 |
| ஏனைய வருமானம் | 1,749,615 | 3,930,000 | 5,564,390 | 4,440,000 |
| **மொத்தம்** | **11,183,884** | **16,500,000** | **18,570,548** | **18,000,000** |

## 07 வேதனங்கள், சம்பளங்கள் மற்றும் ஊழியர் நன்மைகள்

| விடயம் | உண்மையான (2021) (ரூ.) | வரவு செலவுத் திட்டம் 2021 (ரூ.) | உண்மையான 2020 (ரூ.) | வரவு செலவுத் திட்டம் 2020 (ரூ.) |
|---|---|---|---|---|
| ஊழியர்களுக்கான சம்பளங்கள் | 12,155,905 | 12,300,000 | 12,083,613 | 11,900,000 |
| அமைய வேதனங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 45,400 | 80,000 | 258,062 | 250,000 |
| தலைவருக்கான கொடுப்பனவுகள் | - | 1,200,000 | - | - |
| தலைவருக்கான எரிபொருள் மற்றும் வாகன வாடகை | - | 900,000 | - | - |
| ஊழியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு | 10,352 | 20,000 | 39,728 | 50,000 |
| ஊழியர் சேமலாப நிதி | 1,717,186 | 1,700,000 | 1,711,372 | 1,300,000 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 343,437 | 400,000 | 342,275 | 700,000 |
| ஊழியர்களுக்கான மருத்துவக் காப்புறுதி | 1,456,776 | 2,000,000 | - | - |
| ஊழியர்கள் நலன்புரி | 265,044 | 400,000 | 1,659,964 | 3,000,000 |
| இலங்கை சுற்றுலாவுக்கான பங்களிப்பு | 30,705 | 100,000 | - | 100,000 |
| ஊழியர்களுக்கான சீருடைகள் | 30,523 | 45,000 | 31,448 | 45,000 |
| உள்நாட்டுப் பிரயாண செலவுகள் | 64,602 | 75,000 | 53,488 | 75,000 |
| பணிக் கொடை | 687,250 | - | 667,609 | - |
| வரவு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் | 428,323 | 600,000 | 379,430 | 600,000 |
| ஊழியர்கள் பயிற்சி | 173,000 | 200,000 | 63,900 | 300,000 |
| ஊழியர் போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவு | 3,136,000 | 3,600,000 | 3,537,000 | 3,705,000 |
| முன்னைய ஆண்டு சீராக்கல்கள் | 5,732 | - | - | - |
| **மொத்தம்** | **20,550,236** | **23,620,000** | **20,827,889** | **22,025,000** |

## 08 வழங்கல்கள் மற்றும் பயன்படுத்திய நுகர்வுப் பொருட்கள்

| விடயம் | உண்மையான (2021) (ரூ.) | வரவு செலவுத் திட்டம் 2021 (ரூ.) | உண்மையான 2020 (ரூ.) | வரவு செலவுத் திட்டம் 2020 (ரூ.) |
|---|---|---|---|---|
| அச்சீடு மற்றும் காகிதாதிகள் | 794,611 | 1,000,000 | 1,039,412 | 800,000 |
| தொலைபேசி சார்ந்த செலவுகள் | 1,004,702 | 900,000 | 881,883 | 750,000 |
| தபால் மற்றும் குரியர் கட்டணங்கள் | 10,420 | 30,000 | 23,318 | 30,000 |
| பொது அலுவலக செலவுகள் | 916,385 | 600,000 | 496,128 | 900,000 |
| காப்புறுதி - இ.மா.ப வாகனங்கள் | 60,998 | 100,000 | 58,610 | 250,000 |
| அலுவலகப் பராமரிப்பு | 163,564 | 500,000 | 453,879 | 500,000 |
| வாகனங்களுக்கான எரிபொருள் | 36,621 | 150,000 | 99,812 | 150,000 |
| வாகனங்களுக்கான எரிபொருள் | 30,880 | 600,000 | 557,395 | 300,000 |
| நானாவிதப் பொருட்கள் | 86,271 | 200,000 | 97,653 | 200,000 |
| அலுவலக வாடகை | 1,411,512 | 2,000,000 | 1,510,300 | 2,000,000 |
| வாகன வாடகை | 1,483,920 | 1,500,000 | - | - |
| **மொத்தம்** | **5,999,884** | **7,580,000** | **5,218,389** | **5,880,000** |

## 09 சுற்றுலா சந்தைப்படுத்தல் சம்பந்தமான செலவுகள்

| விடயம் | உண்மையான (2021) (ரூ.) | வரவு செலவுத் திட்டம் 2021 (ரூ.) | உண்மையான 2020 (ரூ.) | வரவு செலவுத் திட்டம் 2020 (ரூ.) |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு ஊக்குவிப்புகள் / சுற்றுலா சந்தைகள் | - | - | 35,364,544 | 40,396,000 |
| அச்சீடு / வழங்கல் | 4,660,792 | 5,300,000 | 6,351,638 | 13,300,000 |
| விளம்பரம் | 412,950 | 2,250,000 | - | 1,200,000 |
| இணையத் தள அடிப்படையிலான ஊக்குவிப்புகள் | 3,163,372 | 4,100,000 | 943,480 | 7,080,000 |
| நிகழ்ச்சி சார்ந்த உதவிகள் | 778,738 | 2,500,000 | 4,074,425 | 6,000,000 |
| பரிச்சய சுற்றுலாக்கள் | 785,007 | 2,500,000 | - | - |
| விஷேட கருத் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் | 6,462,858 | 7,050,000 | 308,149 | 5,500,000 |
| **மொத்தம்** | **16,263,717** | **23,700,000** | **47,042,237** | **73,476,000** |

## 10 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

| விடயம் | உண்மையான (2021) (ரூ.) | வரவு செலவுத் திட்டம் 2021 (ரூ.) | உண்மையான 2020 (ரூ.) | வரவு செலவுத் திட்டம் 2020 (ரூ.) |
|---|---|---|---|---|
| ஹோட்டல்களுக்கான பிராந்திய MICE சுற்றுலா பயிற்சி | 350,000 | 350,000 | 523,041 | 3,875,000 |
| ஹோட்டல்களுக்கான பிராந்திய MICE சுற்றுலா பயிற்சி | 1,350,000 | 1,550,000 | - | - |
| MICE சுற்றுலா வாடிக்கையாளர் தரவுத் தளம் | 386,640 | 500,000 | 77,490 | 100,000 |
| கேள்வி மனு அழைத்தல், கேள்வி மனு ஆதாரங்கள் | 5,792 | 75,000 | 3,500 | 150,000 |
| வருடாந்த அறிக்கை அச்சிடுதல் | - | 250,000 | - | 100,000 |
| வருடாந்த அறிக்கை அச்சிடுதல் | 581,603 | 650,000 | - | - |
| **மொத்தம்** | **2,674,035** | **3,375,000** | **604,031** | **4,225,000** |

## 11 உள்நாட்டு சங்கங்கள் மற்றும் சர்வதேச சங்கங்கள் ஆகியவற்றுடான இணைப்பு

| விடயம் | உண்மையான (2021) (ரூ.) | வரவு செலவுத் திட்டம் 2021 (ரூ.) | உண்மையான 2020 (ரூ.) | வரவு செலவுத் திட்டம் 2020 (ரூ.) |
|---|---|---|---|---|
| ICCA உறுப்புரிமை மற்றும் சம்பந்தமான செயற்பாடுகள் | 763,090 | 2,000,000 | 3,525,436 | 6,000,000 |
| சங்கங்கள் சம்பந்தமான நிகழ்ச்சிகள் | 480,600 | 2,000,000 | 1,810,265 | 4,000,000 |
| சங்கங்கள் சம்பந்தமான ஏனைய செயற்பாடுகள் | 1,819,217 | 1,000,000 | 257,000 | 2,000,000 |
| **மொத்தம்** | **3,062,906** | **5,000,000** | **5,592,701** | **12,000,000** |

## 13 ஏனைய செலவுகள்

| விடயம் | உண்மையான (2021) (ரூ.) | வரவு செலவுத் திட்டம் 2021 (ரூ.) | உண்மையான 2020 (ரூ.) | வரவு செலவுத் திட்டம் 2020 (ரூ.) |
|---|---|---|---|---|
| பணிப்பாளர்கள் சபைக் கொடுப்பனவு | 714,750 | 500,000 | 518,850 | 500,000 |
| தொழில் சார் கட்டணங்கள் / கணக்காய்வுக் கட்டணங்கள் | 150,000 | 700,000 | 658,695 | 500,000 |
| **மொத்தம்** | **864,750** | **1,200,000** | **1,177,545** | **1,000,000** |

## 14 நிதி சார்ந்த ஆகுசெலவுகள்

| விடயம் | உண்மையான (2021) (ரூ.) | வரவு செலவுத் திட்டம் 2021 (ரூ.) | உண்மையான 2020 (ரூ.) | வரவு செலவுத் திட்டம் 2020 (ரூ.) |
|---|---|---|---|---|
| வங்கிக் கட்டணங்கள் | 8,050 | 20,000 | 15,215 | 20,000 |
| **மொத்தம்** | **8,050** | **20,000** | **15,215** | **20,000** |

## 15 கையிலும் வங்கியிலும் உள்ள காசு

| விடயம் | 2021 (ரூ.) | 2020 (ரூ.) |
|---|---|---|
| வங்கியில் உள்ள காசு - இலங்கை வங்கி | (1,861,137) | 498,959 |
| வங்கியில் உள்ள காசு - மக்கள் வங்கி | 46,371 | 22,189,440 |
| இவ நிதிய முகாமைத்துவ A/C | 45,646,671 | 120,232,843 |
| **கையிலும் மற்றும் வங்கியிலும் உள்ள மொத்த காசு நிலுவை** | **43,831,906** | **142,921,242** |

## 16 வருமதிகள்

| விடயம் | 2021 (ரூ.) | 2020 (ரூ.) |
|---|---|---|
| ஊழியர் கடன் | 1,397,516 | 1,286,589 |
| ஏனைய வருமதிகள் - SLTDA | 31,997,283 | 19,964,471 |
| கிடைக்க வேண்டிய கடன் வைப்பு வட்டி | 5,250,000 | 9,856,932 |
| **மொத்தம்** | **38,644,799** | **31,107,992** |

## 17 முன்னைய கொடுமதிகள்

| விடயம் | 2021 (ரூ.) | 2020 (ரூ.) |
|---|---|---|
| பதவியுயர்வுகளுக்கான கொடுப்பனவு | 101,018 | 101,018 |
| காப்புறுதி | 11,399 | 5,854 |
| முற்கொடுப்பனவு - MICE சுற்றுலா வாடிக்கையாளர் தரவுத் தளம் | 60,208 | 101,881 |
| அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு | 21,661 | - |
| விழா முற்பணம் | 350,000 | - |
| இணையத் தள பராமரிப்பு கட்டணங்கள் | 10,000 | 10,000 |
| ICCA சங்க உறுப்புரிமை கட்டணங்கள் | - | 1,769,217 |
| **மொத்தம்** | **554,286** | **1,987,970** |

18 2021.12.31 ஆம் திகதியில் உள்ள இ.மா.ப இருப்புக்கள் - கொள்வனவு செய்த பெறுமானம் அல்லது சந்தை பெறுமானம் ஆகிய இரண்டில் எது குறைந்ததோ அந்த பெறுமானத்தின் அடிப்படையில்

| விடய இலக்கம் | 2021.12.31 ஆம் திகதியில் உள்ள இமாப இருப்புக்கள் பற்றிய விபரம் | மொத்தப் பெறுமானம் ரூ. |
|---|---|---|
| 1 | ஊக்குவிப்பு பற்றிய கைந்நூல் | 51,840 |
| 2 | சந்திப்புகள் திட்டமிடும் தரப்பு | 23,205 |
| 3 | MICE சுற்றுலா செயற்பாடு பற்றிய கைந்நூல் | 163,172 |
| 4 | அம்பாந்தோட்டை பற்றிய கைந்நூல் | 152,670 |
| 5 | MICE சுற்றுலா பற்றிய கைந்நூல் | 64,467 |
| 6 | போஷிலேன்ட்டு கோப்பை | 770 |
| 7 | இராமாயனம் பற்றிய கைந்நூல் | 62,574 |
| 8 | காகிதப் பைகள் | 41,770 |
| 9 | ஒட்டுசாதனங்கள் | 14,368 |
| 10 | பென் ட்ரைவ் | 1,183,092 |
| 11 | சுற்றிக் கட்டும் கடதாசிகள் | 128,688 |
| 12 | கோஸ்டெர்கள் | 957,630 |
| 13 | ஊக்குவிப்புப் பைகள் | 861,810 |
| | | **3,706,055** |

20 வைப்புக்கள்

| விடயம் | 2021 (ரூ.) | 2020 (ரூ.) |
|---|---|---|
| ஸ்ரீ லங்கா ரெலிகம் | 5,000 | 5,000 |
| C.F டி மெல் என்ட் சன்ஸ் | 75,000 | 75,000 |
| அமெரிக்கன் ப்ரிமியம் | 2,000 | - |
| **மொத்தம்** | **82,000** | **80,000** |

21 நீண்ட கால முதலீடுகள்

| விடயம் | 2021 (ரூ.) | 2020 (ரூ.) |
|---|---|---|
| மக்கள் வங்கி நிலையான வைப்பு | 132,000,000 | 100,000,000 |
| **மொத்தம்** | **132,000,000** | **100,000,000** |

## 22 கடன்கள் மற்றும் திரண்ட செலவுகள்

| விடயம் | 2021 (ரூ.) | 2020 (ரூ.) |
|---|---|---|
| ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை | 485,851 | 632,121 |
| ஏனைய செலுத்த வேண்டிய தொகை - ஏசியன் அட்வென்சர்ஸ் 2018 | 90,000 | 90,000 |
| க்லீன் போகஸ் | 27,676 | 27,676 |
| டயலொக் ப்ரோட்பேன்ட் | 2,876 | 2,028 |
| மொபிட்டல் ப்ரைவட் லிமிற்றட்டு | 15,366 | 10,874 |
| SLTDA - மகிழுந்து வாடகைக் கட்டணங்கள் | 61,830 | 185,490 |
| ஸ்ரீ லங்கா ரெலிகம் | 22,248 | 10,621 |
| அமெரிக்கன் ப்ரிமியம் | 6,884 | 2,298 |
| SLTDA - வாடி வீடுகள் | 5,411 | 5,045 |
| செலுத்த வேண்டிய ஊ.ந.நி | 240,621 | 239,688 |
| ஸ்ரீ லங்கா ரெலிகம் 2440002 | 11,260 | - |
| செலுத்த வேண்டிய சே.ஊ.நி | 28,875 | 28,762 |
| இலங்கை தொழில் வாண்மை மாநாட்டு சங்கம் | 600,000 | - |
| செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் | 546,000 | 792,000 |
| SLITHM - தாக சாந்திகள் | 2,250 | 660,000 |
| SLTDA - ICT | 129,807 | - |
| கல்கிஸ்ஸ ஹோட்டல் | 5,120 | - |
| செலடினே நிறுவனம் | - | 488,579 |
| இலங்கை மருத்துவர் சங்கம் | - | 1,810,265 |
| லங்கா யுகேளோபல் | - | 335,000 |
| ஹொல்ம்ஸ் பொலார்ட்டு | - | 165,000 |
| செலுத்த வேண்டிய முத்திரை வரி | | 1,050 |
| **மொத்தம்** | **2,282,074** | **5,486,496** |

## 12 மற்றும் 19 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| குறிப்பு | குறியீட்டு இலக்கம் | விவரம் | 2021.01.01 ஆம் திகதிக்கான நிலுவை | 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியிலான சேர்வுகள் | 2021.12.31 ஆம் திகதிக்கான நிலுவை | 2021.01.01 ஆம் திகதிக்கான தேய்மான கணக்கு | 2021.12.31 ஆம் திகதிக்கான தேய்மானம் | 2021.12.31 ஆம் திகதிக்கான தேய்மான கணக்கு | 2021.12.31 ஆம் திகதிக்கான தேறிய புத்தகப் பெறுமானம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3.1 | 101 | அலுவலக உபகரணங்கள் | 3,908,936 | 624,500 | 4,533,436 | 1,524,847 | 417,898 | 1,942,745 | 2,590,691 |
| 3.3 | 103 | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | 1,987,115 | 1,200 | 1,988,315 | 837,964 | 193,625 | 1,031,589 | 956,726 |
| 3.4 | 110 | வாகனங்கள் | - | - | - | - | - | - | - |
| 3.5 | 111 | மென்பாகம் | 90,000 | - | 90,000 | 9,000 | 9,000 | 18,000 | 72,000 |
| | | **உப மொத்தம்** | **5,986,051** | **625,700** | **6,611,751** | **2,371,811** | **620,523** | **2,992,334** | **3,619,417** |

## 23 திரண்ட மிகை / பற்றாக்குறை

| | பங்களித்த மூலதனம் | திரண்ட மிகை/ பற்றாக்குறை | மொத்த தேறிய சொத்துக்கள் ஒப்புரவுகள் |
|---|---|---|---|
| முன்கொணரப்பட்ட 2020 ஜனவரி 1 ஆம் திகதிக்கான நிலுவை | 10,457,784 | 371,234,929 | |
| 2020 ஆம் ஆண்டிற்கான இலாபம் | | (21,892,452) | |
| 2021 ஆம் ஆண்டிற்கான இலாபம் | | 13,133,911 | |
| 2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான C/F நிலுவை | **10,457,784** | **362,476,388** | **372,934,172** |



SRI LANKA CONVENTION BUREAU

# கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

ரீஜபி/ஏ/எஸ்எல்சீபீ/05/21/எவ்ஏ 2022 யூன் 23

தலைவர்
இலங்கை மாநாட்டுப் பணியகம்

**இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பணியகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல: 01 இன் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படக்கூடாத போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட காசு மீதிக்கு எதிராக ரூபா 1,861,137 தொகையான வங்கி மேலதிகப்பற்று ஈடுசெய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான காசு மீதி நிதிக்கூற்றுக்களில் அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 6,700,000 கிரயமான மோட்டார் வாகனத்தின் பயன்தரு ஆயுட்காலத்தை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பணியகத்தின் பெறவேண்டியவைகள் ரூபா 31,997,283 ஆக இருந்த போதிலும் அதற்கு நேரொத்த செலுத்த வேண்டிய மீதி எதுவும் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. இந்த பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளுக்கு இடையில் ரூபா 31,997,283 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்ட போதிலும் அதற்கிணங்க தேவையான சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2021 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

பணியகத்தின் 2021 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்களை ஏனைய தகவல்கள் உள்ளடக்குகின்ற போதிலும் இக் கணக்காய்வாளர் அறிக்கை திகதிக்கு

முன்னர் என்னால் பெறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் அவை தொடர்பான எனது கணக்காய்வாளர் அறிக்கையை உள்ளடக்கவில்லை. ஏனைய தகவல்களிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்குவதில்லை. அத்துடன் அவை தொடர்பாக எந்தவொரு உறுதிப்பாட்டு முடிவையும் நான் தெரிவிக்கவில்லை.

இந்த கணக்காய்வாளரின் அறிக்கை திகதிக்கு முன்னர் என்னால் பெறப்பட்டிருந்த ஏனைய தகவல்கள் தொடர்பாக நான் செய்த பணியின் அடிப்படையில் இந்த ஏனைய தகவல்களில் பொருண்மையான தவறான கூற்று இருப்பதாக நான் முடிவு செய்தால் அந்த உண்மையை நான் தெரிவிக்க வேண்டும்.

இந்த கணக்காய்வாளரின் அறிக்கை திகதிக்கு முன்னர் என்னால் பெறப்பட்டிருந்த ஏனைய தகவல்கள் தொடர்பாக நான் செய்த பணியின் அடிப்படையில் இந்த ஏனைய தகவல்களில் பொருண்மையான தவறான கூற்று இருப்பதாக நான் முடிவு செய்தால் அந்த உண்மையை நான் தெரிவிக்க வேண்டும். இது தொடர்பாக நான் எதுவும் தெரிவிக்கவில்லை.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பணியகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது

உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக்

காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

2.1.1 கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பணியகத்தால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே பணியகத்தால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் பணியகத்தின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

2.2.2 பின்வருவனவற்றை தவிர்த்து 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பணியகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் பணியகம் இணங்கியொழுகாதுள்ளமையை குறிப்பிடுதல்.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **விபரம்** |
|---|---|---|
| (அ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறைச் சட்டத்தின் VIII ஆம் அத்தியாயத்தின் 42 ஆம் பந்தியின் (ஆ), (உ) மற்றும் (ஏ) உபபிரிவு | சுற்றுலாத் துறையில் ஒரு இடமாக இலங்கையின் சந்தைப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்ட பொதுவான கொள்கையொன்றை வழங்குதல், மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் போன்றவற்றைக் கையாள்வதில் ஈடுபட்டுள்ள நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு தொழில்சார் நியமங்களை பரிந்துரைத்தல் மற்றும் இலங்கையை ஒரு சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவதற்கு ஊக்குவிப்பு பணியகத்திற்கு வழிகாட்டலை வழங்குதல் ஆகிய பணியகத்தின் நோக்கங்கள் மீளாய்வாண்டு வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் திறைசேரி அங்கீகாரங்களின்றி ரூபா 118,000,000 குறுங்கால முதலீடு மற்றும் ரூபா 32,000,000 நீண்ட கால முதலீடு என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பந்தி | படிவம் 190 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைக்காக பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டிய போதிலும், பணியகத்தால் விடுமுறைப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பணியகம் அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பணியகத்தின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையை குறிப்பிடுதல்.

டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி




ශ්‍රී ලංකා සම්මේලන කාර්යාංශය
இலங்கை இணக்கப்பாட்டுப் பணியகம்
SRI LANKA CONVENTION BUREAU

4 වන මහල, හෝටල් පාසල් ගොඩනැගිල්ල, අංක. 78, ගාලු පාර, කොළඹ 03
4 ஆம் மாடி, ஹோட்டல் பாடசாலை கட்டிடம், இல. 78, காலி வீதி, கொழும்பு 03
4th Floor, Hotel School Building, No. 78, Galle Rd, Colombo 03

දුරකතන / தொலைபேசி / Telephone : + 94 11 4865050 /1 2440002
ෆැක්ස් / தொலைநகல / Fax : + 94 11 2472985
විද්‍යුත් ලිපිනය / மின்னஞ்சல் முகவரி / Email address : slcb@srilanka.travel
වෙබ් අඩවිය / இணைய முகவரி / Web address : www.meetinsrilanka.com